Onward in Christ
1814 - 2014

# இலங்கையில் இருநூற்றாண்டு காணும் மெதடிஸ்த திரு அவை

திருக்கோணமலை மண்ணில் விதைத்த

# கல்விப் பயிர்



இலங்கை மெதடிஸ்த திரு அவை
திருக்கோணமலை சேகரம்
ஜூன் 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இரு நூற்றாண்டு காணும்
# மெதடிஸ்த திரு அவை

## திருக்கோணமலை மண்ணில் விதைத்த
# கல்விப் பயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகு முகம்

இலங்கைக்கு மெதடிஸ்த மிஷனரிமார் வந்து இருநூறு ஆண்டுகள் ஆகின்றன. 2014ம் ஆண்டை இலங்கை மெதடிஸ்த திருஅவை தனது இருநூற்றாண்டாகப் பிரகடனப்படுத்தி அது தொடர்பான நிகழ்வுகளை நடத்திவருகின்றது. அனைத்திலங்கை மட்டத்தில் கொழும்பிலுள்ள மெதடிஸ்த தலைமையகத்தினால் விசேட நிகழ்வுகள் திட்டமிடப்பட்டு நடந்தேறிவருகின்றன.

1814இல் பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்கு வந்து கரைசேர்ந்த முதலாவது மிஷனரிமார் குழுவில் ஐவர் அடங்கியிருந்தனர். அவர்கள் ஐவரும் அவ்வாண்டிலேயே யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, காலி, மாத்தறை, கொழும்பு ஆகிய இடங்களில் தமது பணிகளை ஆரம்பித்தனர். திருகோணமலையில் மூன்றுஆண்டுகளின் பின்னர்,அதாவது 1817 இல் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டது. எவ்வாறெனினும் முதல் ஓரிரு வருடங்களுக்குள் மெதடிஸ்த திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பிரதேசம் என்ற வகையில் திருகோணமலை சிறப்புப் பெறுகின்றது.

இவ்வாண்டின் இருநூற்றாண்டு நிறைவு நிகழ்வுகளுக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் திருகோணமலை வாழ் மெதடிஸ்த கிறிஸ்தவ மக்கள் தமது திருஅவையினால் இப்பிரதேசத்தில் கடந்தகாலங்களில் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் செயற்பாடுகளை நினைவுபடுத்தி அவற்றை ஆவணப்படுத்த வேண்டுமெனத் தீர்மானித்தனர். அதன் விளைவாகத்தான் இச்சிறுமலர் வெளியிடப்படுகின்றது.

மெதடிஸ்த திருஅவை இலங்கை முழுவதிலும் அளப்பரிய கல்விப் பணியாற்றியுள்ளது. 1814 இல் ஆரம்பித்து 1960 இல் அரசாங்கத்தினால் பாடசாலைகள் பொறுப்பேற்கப்படும் வரை 177 பாடசாலைகள் மெதடிஸ்த மிஷனால் நடத்தப்பட்டுள்ளன. இவற்றில் இரு பாடசாலைகளைத் தவிர ஏனைய 175 பாடசாலைகளும் அரசிடம் கையளிக்கப்பட்டுவிட்டன. திருகோணமலைப் பிரதேசத்தில் 1960களில் கையளிக்கப்பட்ட எட்டு பாடசாலைகள் இன்று நன்கு வளர்ச்சியடைந்து சிறப்பாக இயங்கி வருகின்றன. இன்று அவை அரசாங்கப் பாடசாலைகளாக வெவ்வேறு பெயர்களைத் தாங்கி நின்றாலும் அவை மெதடிஸ்த மிஷன் விதைத்த விதையிலிருந்து முளைத்து வளர்ந்த கல்விப் பயிர்கள் என்ற உண்மை என்றும் அழியாது. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை மெதடிஸ்த சேகரம் திருகோணமலை கல்வி வலயத்துக்குட்பட்ட கீழ்வரும் எட்டு பாடசாலைகளையும் தன்னோடு இணைத்துக் கொண்டு இந்த இருநூற்றாண்டு நிறைவை இவ்வருடம் கொண்டாடத் தீர்மானித்தது.

1. தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, திருகோணமலை
2. தி/கும்புறுப்பிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை
3. தி/பெருந்தெரு விக்நேஸ்வரா மகாவித்தியாலயம்
4. தி/ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயம்
5. தி/சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயம்
6. தி/நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி
7. தி/குச்சவெளி அந்நூரியா முஸ்லிம் மகாவித்தியாலயம்
8. தி/திரியாய் தமிழ் மகாவித்தியாலயம்

இவற்றுள் முதலிரு பாடசாலைகள் வரலாற்றை நினைவுபடுத்தும் விதத்தில் தமது பெயர்களில் 'மெதடிஸ்த' என்ற பதத்தைத் தாங்கி நிற்கின்றன.

கும்புறுப்பிட்டி கிராமத்தில் மெதடிஸ்த மிஷனால் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட இடத்தில் தி/கும்புறுப்பிட்டி கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு ஆரம்பப் பாடசாலை இப்போது இயங்குகிறது. ஏற்கனவே இதே இடத்தில் இயங்கிவந்த தி/கும்புறுப்பிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை பிரதான வீதியோரத்தில் அமைக்கப்பட்ட புதிய கட்டிடங்களுக்கு இடம் மாற்றப்பட, அவ்விடத்தில் புதிதாக தி/கும்புறுப்பிட்டி கனிஷ்ட வித்தியாலயம் நிறுவப்பட்டுத் தற்போது சிறப்பான ஒரு ஆரம்பப் பாடசாலையாக விளங்குகிறது. எனவே அக்கிராமத்தில் விதைக்கப்பட்ட ஒரு விதை இறைவனருளால் இரு பயிர்களைத் தந்துள்ளதெனலாம்.

மேற்குறிப்பிட்ட எட்டுப் பாடசாலைகளினதும் வரலாற்றுக் குறிப்புகளைத் தொகுத்து இம்மலரில் வெளியிடுவதே இருநூற்றாண்டு விழாவையொட்டிய எமது சிறப்புநிகழ்வாக அமைகின்றது. இம்முயற்சி வெற்றி பெற எம்மோடு மனமுவந்து ஒத்துழைத்த பாடசாலை அதிபர்கள் ஒவ்வொருவருக்கும் மிகவும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

திருகோணமலை மாவட்ட எல்லைக்குள் மேலும் சில பாடசாலைகள் மெதடிஸ்த மிஷனால் தொடங்கி நடத்தப்பட்டதாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஅவையின் வரலாற்றுப் பதிவுகளில் காணக்கூடியதாக உள்ளது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மூதூர் பிரதேசத்தில் சேனையூர் உட்பட்ட சில கிராமங்களில் ஆறு பாடசாலைகள் மெதடிஸ்த மிஷனால் நடத்தப்பட்டுள்ளன. மூதூரில் 1900 ஆம் ஆண்டிலிருந்து திருஅவையின் பணிகள் ஆரம்பமானதாக வரலாறு கூறுகின்றது. ஏறத்தாழ அதே காலப்பகுதியில் கல்விப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம்.

மதம், இனம், மொழி என்ற குறுகிய வட்டங்களைக் கடந்து வரலாற்று உண்மைகளை உள்ளது உள்ளபடி ஏற்றுக்கொள்கின்ற மனப்பக்குவம் ஒவ்வொருவருக்கும் வருமானால் நம் நாட்டில் பல பிரச்சினைகள் தானாகவே மறைந்துவிடும். கல்வியினூடாக நாம் காண விழைகின்ற தரிசனமான "சமநிலை ஆளுமைக்கு" வலுச் சேர்க்கின்ற ஒரு முக்கியமான அம்சம் இதுவாகும்.

இன்று இப்பாடசாலைகள் பெருவிருட்சங்களாக வளர்ந்து நிற்கின்றன. அவை வித்துக்களாக ஊன்றப்பட்ட வரலாற்றை மனதிற்கொள்வோம். அதில் தம்மை அர்ப்பணிப்போடு ஈடுபடுத்திச் செயற்பட்ட நம் முன்னோர்கள் என்றும் நமது நன்றிக்குரியவர்கள்.

அந்த வகையில் இலங்கை மெதடிஸ்த திருஅவையின் இருநூற்றாண்டு நிறைவுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தி இம்மலரை வெளியிடும் பணியில் எம்மோடு இணைந்து கொள்ளும் ஒவ்வொருவருக்கும் இறையாசிகள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

வெளியீட்டுக் குழு
மெதடிஸ்த திருஅவை,
திருகோணமலை சேகரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மெதடிஸ்த திரு அவையின்
# திருப் பேரவைத் தலைவர் அவர்களின்
# ஆசிச் செய்தி

இறைவனுடைய திட்டத்தை ஆசியாவிலே நிறைவேற்றும்படி தூய ஆவியானவர் நமக்கூடாக செயல்படுகின்றார். மெதடிஸ்த திருச்சபை உலகளாவிய ரீதியில் பரவி இருக்கிறது. மெதடிஸ்த திருச்சபை இலங்கையிலும் ஏனைய ஆசிய நாடுகளிலும் வேரூன்றி இருப்பது இறைவனின் பிரசன்னம் நம்மிடத்தில் இருப்பதற்கு சான்றாகும்.

அருட்திரு பென்ஜமின் கிளவ், அருட்திரு வில்லியம் ஹவாட் அவர்களும் மனைவியும், அருட்திரு ஜேம்ஸ் லின்ஞ், அருட்திரு ஜோர்ஜ் இரெஸ்கின், அருட்திரு தோமஸ் ஸ்குவான்ஸ் அருட்திரு வில்லியம் ஓல்ட் அவர்களும் மனைவியும், அருட்கலாநிதி தோமஸ் கோக் அவர்களின் தலைமையில் இலங்கை பணிக்கான பயணத்தை 30 டிசம்பர் 1813ல் மேற்கொண்டனர். இப் பயணத்தில் அருட்கலாநிதி தோமஸ் கோக் அவர்களும் திருமதி ஓல்ட் அவர்களும் இறைபதம் அடைய மற்றவர்கள் 1814ம் ஆண்டு 29 ஜுன் மாதத்தில் இலங்கையில் காலடி பதித்தனர். அன்றைய தினம்தான் மெதடிஸ்த திரு அவை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. வெகு விரைவில் சிங்கள, தமிழ் மொழியை கற்றுக்கொண்ட திருப்பணியாளர்கள், இலங்கை மக்களின் நண்பர்களாக மாறினர்.

1816ம் ஆண்டு ஆசியாவிலே முதலாவது மெதடிஸ்த ஆலயம் இலங்கை புறக்கோட்டையில் கட்டப்பட்டது. மெதடிஸ்த திருச்சபை இலங்கையில் 200 ஆண்டுகளை நிறைவு செய்யும் வேளையில் ஆசிய மெதடிஸ்த திருப்பணியும் 200 ஆண்டுகளை நிறைவு செய்கிறது.

இந்த 200வது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகளில் ஒரு பகுதியாக திருகோணாமலை சேகரம் முன்னெடுத்துச் செல்லும் செயற்பாட்டுக்கு ஆசிச் செய்தியைக் கொடுப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நாம் ஒவ்வொருவரும் ஆண்டவரின் வழிநடத்துதல் எம்மோடு கூட இருக்க பிரார்த்தனை செய்ய அழைக்கப்படுகின்றோம். இவ்வருடத்தில் நடைபெறும் நிகழ்வுகளுக்கூடாக ஆண்டவர் திருச்சபையின் வாழ்விலும் மாற்றங்களை உருவாக்க வேண்டி நிற்போம்.

அருட் கலாநிதி அ.வி ஜெபரே
திருப்பேரவைத்தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை மெதடிஸ்த திருஅவையின்

## வடக்கு–கிழக்கு திருமாவட்ட அவைத் தலைவர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

இலங்கையில் மெதடிஸ்த திருச்சபையின் திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருநூறு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இவ்வரிய நிகழ்வைக் காணும் பெரும் பாக்கியத்தைப் பெற்ற சந்ததியாக நம்மை வைத்திருக்கும் இறைவனை நன்றியுடன் துதிப்போம்.

மெதடிஸ்த திருச்சபையின் வரலாற்றில் நற்செய்தி பரப்புப் பணியும் கல்விப் பணியும் பிரித்துப் பார்க்கப்பட முடியாத அம்சங்களாக உள்ளன. எங்கெல்லாம் ஆன்ம மீட்புக்குரிய நற்செய்தி வழங்கப்பட்டதோ, அங்கெல்லாம் அறிவுக் கண்களைத் திறப்பதற்கான கல்வியும் சேர்த்தே கொடுக்கப்பட்டது. தம் சொந்த நலன்களையெல்லாம் துறந்து நீண்ட கடற்பயணம் செய்து இந்நாட்டுக்கு வந்த மிஷனரிமார் இங்கிருந்த சமூகத்தோடு தம்மை இணைத்துக் கொண்டனர். தேவைகளை இனங்கண்டு தீர்த்து வைக்க முற்பட்டனர். அன்று, அதாவது 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கல்வி எல்லோருக்கும் கிடைக்காதிருந்த நிலைமையைக் கண்டு அதனை மாற்றக் கடினமாக உழைத்தனர். அதன் விளைவாக மெதடிஸ்த மிஷன் பாடசாலைகள் உருவாகின.

கிழக்கிலங்கையிலேயே மெதடிஸ்த திருச்சபையின் கல்விப் பணிகள் கூடுதலாக இடம் பெற்றன. நகரங்களில் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கிலமொழிப் பாடசாலைகள் மாத்திரமன்றிக் கிராமங்கள் பலவற்றிலும் தாய்மொழிக் கல்விக்கான ஆரம்பப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. எந்தெந்தக் கிராமங்களில் மெதடிஸ்த மிஷனினால் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டனவோ அக்கிராமங்கள் கல்வி வளர்ச்சியில் இன்றும் முன்னிலையில் இருப்பது இறைவனின் ஆசீர்வாதம் எனலாம். இத்தகைய கல்வி நிறுவனங்கள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு, பெயர்களும் மாற்றப்பட்டு விட்டாலும், மெதடிஸ்த திருச்சபை நட்ட கல்வி வித்துக்கள் எவையும் வீணாகிவிடவில்லை. இன்று பெருவிருட்சங்களாக அவை வளர்ந்து கல்விப் பணியாற்றுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதடிஸ்த திருச்சபை இருநூற்றாண்டைக் கொண்டாடும் இவ்வேளையில் அதன் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களையும் தன்னோடு இணைத்துக் கொண்டு வரலாற்றை நினைவுபடுத்தி இறைவனுக்கு நன்றி கூற முற்படுவது பாராட்டத்தக்க ஒரு முயற்சியாகும். திருகோணமலை வாழ் மெதடிஸ்த மக்கள் சேகரமாக இணைந்து இம்முயற்சியில் ஈடுபடுவது மகிழ்ச்சியளிக்கின்றது.

அவர்கள் வெளியிடும் நினைவு மலருக்கு வடக்கு கிழக்குத் திருமாவட்ட அவைத் தலைவராக எனது வாழ்த்தைத் தெரிவிப்பதில் மனநிறைவு கொள்கின்றேன். எல்லா நிகழ்வுகளும் வெற்றிகரமாக நடந்தேறவும் இறைவன் திருப்பெயரொன்றே மாட்சிமையடையவும் இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

அருட்திரு. எஸ். டி. தயாசீலன்
திருமாவட்ட அவைத் தலைவர்
வடக்கு - கிழக்கு திருமாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை மெதடிஸ்த சேகர
# முகாமைக்குரு அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

## DEAF LINK
### METHODIST CHURCH, SRI LANKA
*"CENTRE FOR PEOPLE WITH DISABILITIES"*
***(Methodist Church, Sri Lanka is Registered under the 1935 Parliamentary act)***


**Coordinating Centre:**
Colombo City Mission Old Building,
155, Dam Street, Pettah, Colombo-12
Telephone: 0094113079918
E-mail: deaflinkc@gmail.com

**Batticaloa Center:**
No34/13, [illegible] Lane,
Batticaloa.
Telephone: 0094 652651411

**Mandur Centre:**
Methodist Church, Mandur.
Telephone: 0094 654320644

**Jaffna/Uduvil Centre:**
Aiady Junction, Manipay Road,
Uduvil, Chunnakam,
Telephone/Fax: 0094 212255488
E-mail: deaflinknorth@yahoo.com

**Anuradhapura Centre:**
No: 311, Visaka Mawatha, [illegible],
Anuradhapura.


Date: 15.05.2014

புனித பயணத்தில்...

வருடங்கள் 200 ஐ கடந்து வந்த எம்மவரை வழுவாது காத்த, இயேசுவின் கரங்களுக்கு எம் நன்றிகள்.

ஜோன் வெஸ்லியின் தீபத்தை தோமஸ் குக் ஐயர் வழியாக இலங்கை மண்ணில் வித்திட்ட மிஷனரிமாருக்கு எம் நன்றிகள்.

கிழக்கு மண்ணில் நற்செய்தியை நன்றுரைத்த திருப்பணியாளர்களுக்கு எம் நன்றிகள்.

திருமலை சேகரத்தின் ஆன்மீக பயணத்தில் அயராது உழைத்த இறைமக்களுக்கும் எம் நன்றி.

கடந்த காலத்திற்கு நன்றி.....
வருங்காலத்திற்கு தயாரிப்பு.....
நிகழ்காலத்திற்கு உழைப்பு.....

எனும் ஆன்மீக சிந்தனையோடு எமது இறைபணி புனித பயணமாக மலர, வளர எம் நல்லாசிகள்.

இறையாசியுடன்
அருட்திரு.எஸ்.எஸ்.ஞானராஜா

**10 Years of Service**
"Support the Silent Ones"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல் சேகரமான

## மூதூர் வாகரை சேகர முகாமைக் குரு அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

இலங்கை மண்ணில் மெதடித்த திருச்சபையின் 200வது ஆண்டு நிறைவு வரலாற்றுப் பதிவில் திருகோணமலை சேகரம் வெளியிடும், வரலாற்றை உரசிப்பார்த்து ஞாபகமூட்டும் நினைவுமலர் வெளியீட்டுக்கு வாழ்த்துச் செய்திகளை வழங்குவதில் இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

1814ல் தொடங்கிய திருப்பணியின் பயணம் இன்று வரை பல்வேறு தொண்டர்களுக் கூடாக தொடரும் பயணமாக இருப்பதை எண்ணிப் பார்க்கும் போது வரலாற்றின் செயற்பாடுகளுக்கூடாக இறைவன் எங்களோடு பயணிக்கிறார் என்ற அர்த்தத்தைக் கற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

மிஷனறிமார்களின் தியாகங்களை நாம் பின்னிட்டுப் பார்த்து 200வது ஆண்டு நிறைவில் நன்றி செலுத்துகிற அதேவேளை எம்மவர்களின் தியாகங்களையும் மீட்டிப்பார்க்க வேண்டியதாக வுமுள்ளோம். திருகோணமலை சேகரத்தின் ஒட்டுமொத்த நபர்களின் அர்ப்பணிப்பினாலும், சாட்சியினாலும் புதிய பணித்தளங்களை உருவாக்கி இன்று மூதூர்-வாகரை சேகரம் என்ற புதிய சேகரம் உருவாகக் காரணமாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்க விடயமாக அமைகிறது. இன்று ஏழு திருச்சபைகளையும் இரண்டு பணித்தளங்களையும் கொண்டதாக செயற்படுகின்றது வரலாற்றின் பதிவில் குறிப்பிடவேண்டும்.

யுத்தப்பிரச்சினை, போக்குவரத்து பிரச்சினை என்பவற்றின் மத்தியிலும், வாகரை வரைக்கும் கல்வி, சமூகப்பணி, நற்செய்திப்பணி என்பவற்றினூடாக சமூக அமைப்பில் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் ஆற்றிய அரும் தொண்டு எம்மவர்களின் நற்தூது ஆர்வத்தைக் கோடிட்டுக்காட்டுகிறது.

வரலாற்றின் சுவட்டின் பதிவுக்கு மூதூர் - வாகரை சேகரமாக வாழ்த்துக்களையும், மன்றாட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அருட்திரு.கே.எஸ்.நிஷாந்தன்,
முகாமைக்குரு,
மூதூர் - வாகரை சேகரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலையறிவோடு கூடிய இடுபணியின் வெற்றி

"தொலையறிவு (Vision) அற்ற இடுபணி (Task) சலிப்பூட்டும் ஒரு இடுபணியாகும். இடுபணி அற்ற தொலையறிவு ஒரு கனவாகும். ஆனால், தொலையறிவோடு கூடிய ஒரு இடுபணி வெற்றியின் பணியாகும்" இக்கூற்றுக்கமைய, எத்தொலையறிவோடு கூடிய ஒரு இடுபணியின் வெற்றிப் படிக்கல்லாக, மெதடிஸ்த மிஷனரிமார்களினால் இக்கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டதோ, அதே தொலையறிவோடு இன்றும் வெற்றியின் வீறுநடை போடுகின்ற திருகோணமலை, மெதடிஸ்த மிஷன் பாடசாலைகளை மனமார வாழ்த்துகிறேன்.

இலங்கையில் மெதடிஸ்த வரலாறு என்பது இரத்தத்தால் எழுதப்பட்ட ஒரு வரலாறு என்றால் அது மிகையாகாது. இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன்பாக இங்கிலாந்து நாட்டிலே பணியாற்றிக் கொண்டிருந்த ஒரு சிறு அருட்பணிக் குழுவினருக்கு ஏற்பட்ட தொலையறிவோடு கூடிய ஒரு இடுபணியின் வெற்றியினையே நாம் இந்த நாட்களிலே நினைவு கூருகின்றோம்.

அவ்வகையில், மிஷனரிப் பாடசாலைகளின் வரலாற்றையும் பழைமையையும் பாரம்பரியத்தையும் மறைக்கவும் மாற்றவும் முற்படுகின்ற சமகால அடிப்படைவாதம் கொண்ட கல்விமான்கள் மத்தியில், அவ்வரலாறு எப்போதும் பேணிப்பாதுகாக்கப்படவும் வளர்க்கப்படவும் வேண்டும் என்ற நோக்கில் திருகோணமலை மெதடிஸ்த திரு அவையினால் முன்னெடுக்கப்பட்ட இவ் அரிய பணிக்கு முன்வந்து தமது ஒத்துழைப்புக்களைத் தந்த அதிபர் பெருந்தகைகளை வாழ்த்தி நிற்கிறேன்.

ஒவ்வொரு நிலையத்தினதும் விழாக்கள் அந்நிலையத்தின் அபிவிருத்தி சார்ந்த திறனாய்வுகளை (Constructive Criticism) மையமாகக் கொண்டது. அவ்வாறான விழாக் காணல்களே எதிர்கால வெற்றிக்கு நம்மை வழிநடத்தும் என்றால் அது மிகையாகாது. அவ்வாறு இருநூற்றாண்டு காணும் எமது மெதடிஸ்த திரு அவையை, சாதித்து விட்டோம் என்ற பெருமிதத்தில் அல்ல மாறாக சாதிக்கப் பிறந்திருக்கிறோம் என்ற பெருமிதத்தோடு முன்னேற்றிச் செல்லவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்றால் அது மிகையாகாது.

"கற்றல் நமக்கு ஆற்றலைக் கொடுக்கிறது, ஆற்றல் நம்மை புதிய சிந்தனைக்கு இட்டுச் செல்கிறது, சிந்தனை நமக்கு அறிவைக் கொடுக்கிறது, அறிவு நம்மை ஒரு சிறந்த படைப்பாக்குகிறது." இது அப்துல் கலாம் அவர்களின் தாரக மந்திரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நம் மத்தியில் கிறிஸ்தவ சமயத்தைக் குறித்து பலவாறான திறனாய்வுகள் இருந்தாலும் கல்விப் பாதையில் நம்மை ஒரு நற்படைப்பாக இவ்வுலகிற்கு எடுத்துக் காட்டிய நம் மிஷனரிமாரை நாம் என்றும் நினைவில் வைத்திருப்பது நமது தலையாய கடமையாகும்.

அன்று எம் மிஷனரிமார்களால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாரிய பணியானது இன்றைய மெதடிஸ்தர்களால் தொடரப்பட நம்மை நாம் இந்நூற்றாண்டில் அர்ப்பணிப்போமாக.

இறையாசி என்றும் நம்மோடு தங்கட்டும்.

அருட்பணி. சுஜிதர் சிவநாயகம்
திருகோணமலை சேகரம்

**"ஒரு சகோதரன் அல்லது சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும் போது, அவர்கள் உடலுக்குத் தேவையானவை எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து "நலமே சென்று வாருங்கள்: குளிர்காய்ந்து கொள்ளுங்கள் பசியாற்றிக் கொள்ளுங்கள், என்பாரென்றால் அதனால் பயன் என்ன? அதைப் போலவே, நம்பிக்கையும் செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்"**

**(யாக்கோபு 2:15-17)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவுடன் முன்செல்வோம்

இலங்கையில் மெதடிஸ்த திருச்சபை உருப்பெற்று இருநூறு ஆண்டுகளைக் கடந்து புதிய யுகத்துக்குள் கால் பதித்துள்ள இந்தத் தருணத்தில் திருச்சபை பெற்றுக்கொண்ட வெற்றி என்ன என்பதை மாத்திரம் பார்க்காது திருச்சபை கடந்த இரு தசாப்தங்களில் அடைந்த தோல்வி என்ன? பெலவீனம் என்ன? வீழ்ச்சி என்ன? என்பதை மீள் பரிசோதனை செய்து, புதிய யுகத்தில் புதிய பல தரிசனங்களுடன் இயேசுவின் பணி செய்ய அழைக்கப்படுகின்றது.

மத்தேயு 5:14-16 இல் கூறப்பட்ட விளக்கு உவமையின்படி 'நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்' என்பது இலங்கை மெதடிஸ்த திருச்சபையை இயேசுவின் பணியைச் செய்ய அழைப்பதாக இருக்கின்றது. இன்று இயேசு எங்கே இருக்கிறாரோ அங்கு மெதடிஸ்த திருச்சபை செல்ல, பணி செய்ய அழைக்கப்படுகின்றது. கடந்த காலத்தில் இலங்கையில் நடைபெற்ற யுத்தமானது ஒரு சிறிய நிலப்பரப்புக்குள், சிறுபான்மையினராக, ஏழைகளாக வாழ்ந்த அப்பாவி மக்களையே மிகவும் பாதித்தது. இந்த யுத்தத்தினால் உயிர் இழப்புக்களையும், உடைமைகளையும், உரிமைகளையும் இழந்து அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிட்ட அந்த நிலப்பரப்புக்குள் வாழ்ந்த அப்பாவி மக்களாவர்.

ஆகவே இன்று இயேசு எங்கே இருக்கிறார் என்று பார்த்தால் இவ்வாறு ஒடுக்கப்படுகின்ற மக்கள் மத்தியில் வாழ்கின்றார் எனலாம். அவர்கள் தமது உரிமைகளைப் பெறுதற்கான செயற்பாடுகளில் பங்கு கொள்கிறார். ஆகவே இன்று திருச்சபை இயேசுவின் பணி செய்வதாயின் இந்த மக்களின் உரிமைக்காக, விடுதலைக்காக செய்கின்ற பணிகளும் இயேசுவின் பணியே ஆகும். மாட்டின் லூதர் கிங் கூறினார் "'கொடியவர் இழைக்கும் தீங்கினும் கொடியது நல்லவர் இழைக்கும் மௌனமே'[1]. என்று. இன்று திருச்சபை இயேசுவின் நல்ல பணியைச் செய்கின்றோம் என்று சொல்லிக்கொண்டு சமூகத்தில் நடக்கின்ற அநீதிகளை, அடக்குமுறைகளைக் கண்டும் மௌனமாய் இருப்பது சரியல்ல. அப்படி இருந்தால் கொடுமைகளைச் செய்கின்ற கொடியவர்களை விட நாம் பெரிதும் கொடியவர்களாகக் காணப்படுவோம்.

டியட்ரிச் பொன்கொபர் கூறுகின்றார் "அநீதிக்குப் பலியாக்கப்பட்டோரின் பிரச்சினைக்கான காரணத்துக்காகக் குரலெழுப்புவதும், பசியிலிருப்போரிடம் உணவைப் பகிர்வதும் திருச்சபையின் பொறுப்புக்கள். இவற்றை நற்செய்தியை பறைசாற்றும் பணியிலிருந்து பிரித்துப்பார்க்க முடியாது."[2] ஆகவே இன்று உரிமைகள் மறுக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டு, ஒடுக்கப்பட்டு வாழ்கின்ற மக்களின் அழுகுரலைக் கண்டும் காணாதது போல் இருக்குமாயின், திருச்சபை இயேசுவின் பணியை, ஒப்புரவுப் பணியை செய்யவில்லை என்பதுதான் உண்மை.

[1] செ.டே.ப. செல்வன், வாழும் இயேசு சமூகம், பேராதனை பல்கலைக்கழகம் இலங்கை பக்.89.
[2] Ibid.p.87.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, இயேசு எவ்விதம் ஒளியாக உலகத்திற்கு வந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, புறம் தள்ளப்பட்டு ஒதுக்கப்பட்டு, உரிமைகளை இழந்து, கட்டுண்டவர்களாக, பாவிகளாக, ஏழைகளாக யாரெல்லாம் வாழ்ந்தார்களோ அவர்களின் விடுதலைக்காக, அவர்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்து, நீதிக்காக போராடினாரோ அதே போன்று திருச்சபையும் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிப் பணி செய்வதன் மூலம் சமூகத்தில் ஒரு விளக்காக ஒளி கொடுக்க முடியும்.

மத்தேயு நற்செய்தி நூலில் கூறப்படும் விளக்கு உவமையில் மலையின் மேல் இருக்கும் பட்டணம் மறைவாய் இருக்க முடியாது என்கிறார். இன்று திருச்சபை சமூகத்தில் நடைபெறும் அநீதிகளை, அடக்குமுறைகளை, துன்புறுத்தல்களை, மனித உரிமை மீறல்களைக் கண்டு பயந்து, ஒதுங்கி, ஒளிந்து இருக்க முடியாது. திருச்சபை துணிவுடன் இவைகளுக்கு முகம் கொடுத்து, நீதிக்காகக் குரலெழுப்ப வேண்டும். இப்படி திருச்சபை துணிந்து செயல்படுகின்றபோது பலவிதமான அச்சுறுத்தல்கள், துன்புறுத்தல்கள், பாடுகளைச் சந்திக்கவும் நேரிடும். இதுவே ஒளிக்கும் இருளுக்குமான போராட்டம், நன்மைக்கும் தீமைக்குமான போராட்டம், நீதிக்கும் அநீதிக்குமான போராட்டமுமாகும். இப் போராட்டத்தின் முடிவில் ஒளி அல்லது நீதி வெற்றி பெறும் என்பதை அறியலாம்.

ஒரு வேளை திருச்சபை மக்கள் கேட்கலாம் 'நாம் ஒரு சிறிய குழுவாக இருந்து செய்கின்ற போராட்டம் வெற்றி பெறுமா?' என்று. உண்மையில் வெற்றிபெறும். ஒரு சிறிய ஒளி எவ்வாறு பெரிய இருளை அகற்றுகின்றதோ அதே போன்று திருச்சபையாக நீதிக்காகச் செய்யும் சிறிய காரியம் பெரிய வெற்றிக்கு வழிவகுக்கும். இஸ்ரவேல் மக்களில் ஒரு சிறிய மக்கள் கூட்டம் மாத்திரம் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்துகொண்டு ஏன் நாங்கள் மாத்திரம் இந்த சிறைவாசத்தை அனுபவிக்க வேண்டும், நாங்கள் மாத்திரம் ஏன் பாடுபட வேண்டும் என்று புலம்பினார்கள். ஆனால் அந்த சிறிய இஸ்ரவேல் மக்களின் பாடுகள் மூலம் ஒட்டுமொத்த இஸ்ரவேல் மக்களும் பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையைப் பெற்றுக்கொண்டனர். அது போன்று திருச்சபை இலங்கையில் ஒரு சிறிய மக்கள் கூட்டத்தைக் கொண்டிருந்தாலும் நாம் துணிந்து நீதிக்காக, உரிமைக்காக, சமூக ஒன்றிப்புக்காக முன்னெடுக்கின்ற பணிகள், அதன் மூலம் நாம் சந்திக்கும் பாடுகள், துன்பங்கள் என்பன ஒட்டுமொத்த இலங்கை மக்களின் விடுதலைக்கு வழிவகுக்கும். மலைப் பிரசங்கத்தில் 'நீதியின் நிமித்தம் துன்பப்படுகின்றவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் கடவுளின் பிள்ளைகள் எனப்படுவார்கள்' என்றார் இயேசு. கடவுளின் பிள்ளைகள் என்றால் நீதியின் நிமித்தம் துன்பப்பட ஆயத்தமாக இருக்க வேண்டும். அநீதியைக் கண்டு ஓடி, ஒதுங்கி மறைந்து வாழ்ந்தால் திருச்சபை நீதியின் நிமித்தம் துன்பப்படவோ, கடவுளின் பிள்ளைகளாக இருக்கவோ முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்த போது உண்மைக்காக, நீதிக்காகத் துணிந்து செயல்பட்டார். இயேசு மறைநூல் அறிஞர்களுக்கும். அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் நேருக்கு நேர் எதிர் நின்று அவர்கள் தவறுகளைச் சுட்டிக் காட்டினார். எருசலேம் பவனியின் போது நேரடியாக எருசலேம் ஆலயத்தில் நடந்த அநீதி, கொள்ளை இலாபம் போன்றவற்றை எதிர்த்து அடித்துத் துரத்துகின்றார். மத்தேயு 22:52 இல் அவர் தம்மிடம் வந்த தலைமைக் குருக்களையும், கோயில் காவல் தலைவர்களையும் மூப்பர்களையும் பார்த்து "ஒரு கள்வனைப் பிடிக்க வருவது போன்று வாள்களோடும், தடிகளோடும் வந்தது ஏன்? நான்தான் அனுதினமும் கோயிலில் உங்களுடன் இருந்தேனே" என்று கூறுவதன் மூலம் இயேசு எதற்கும் பயந்து, மறைந்து வாழவில்லை என்பதைக் காணலாம். இயேசு இந்த உலகத்தில் நன்மை செய்பவராக, உண்மையை குறித்துப் பேசுகிறவராக, நீதிக்காகப் போராடியவராகச் சுற்றித் திரிந்தார். அதனால்தான் அவர் பயப்படவில்லை. ஆகவே நன்மையைச் செய்வதற்கு, நீதியான காரியங்களைச் செய்வதற்கு சமூகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குப் பயப்படத் தேவையில்லை என்பதற்கு இயேசுவின் வாழ்வு நல்ல எடுத்துக்காட்டாகும்.


இயேசு தனக்கு ஏற்படவிருந்த சிலுவைப்பாடுகள், மரணம் என்பனவற்றை அறிந்திருந்தும் அவற்றிற்கு மறைந்து ஓடவில்லை பாடுகளுக்கு முகம்கொடுத்தார், விசாரணையின் போது துணிவுடன் பதில் கொடுத்தார். கன்னத்தில் அறைந்தவர்களைப் பார்த்து அடித்ததற்கான நியாயத்தை கேட்கிறார். உண்மையை, நீதியை ஒருபோதும் அழித்துவிட முடியாது என்று இயேசு அறிந்திருந்தார். அதனால்தான் அவர் துணிந்து செயல்படுகின்றார். இயேசுவைச் சிலுவையில் அறைந்து கல்லறையில் அடக்கம் செய்தார்கள். அவர்கள் நினைத்தார்கள் இயேசுவின் மரணம் மூலம் உண்மையை புதைத்துவிட்டோம், நீதியைக் கல்லறையில் வைத்து பூட்டிவிட்டோம் இனி அது எழும்ப முடியாது என்று. ஆனால் இயேசு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்ததன் மூலம் உண்மை அழியாது, நீதி சாகாது இறுதியில் இவைகளே வெற்றிபெறும் என்பதை நிரூபித்துக்காட்டினார். ஆகவே திருச்சபையும் இயேசுவின் பாடுகளில், மரணத்தில், உயிர்தெழுதலில் பங்கு கொள்வதன் மூலமே மலையின் மேல் உள்ள பட்டணமாகக் காட்சி கொடுக்கின்றதாக இருக்கமுடியும். உண்மை, நீதி சாகாது என்பதற்கும் சாட்சிகளாக வாழ முடியும்.

ஆகவே புதிய யுகத்தில் கால் பதித்துள்ள இலங்கை மெதடிஸ்த திருச்சபை இயேசுவின் பணி என்ன என்பதை உணர்ந்து பணி செய்ய அழைக்கப்படுகின்றது. நாம் இன்னும் பயந்து, மறைந்து, ஒழிந்து வாழாதபடி மலையின் மேல் வைக்கப்பட்ட தீபம் போல் அனைவருக்கும் வெளிச்சம் கொடுக்க எங்களையே தத்தம் செய்வோம். அதற்குத் தேவையான அறிவையும் ஆற்றலையும் இறைமைந்தன் இயேசுவே நமக்குத் தந்தருள்வாராக!

அருட்பணி. எஸ். விஜயநாதன்
நிலாவெளி திருச்சபை
திருகோணமலை சேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உடல் பொருளாவி மூன்றையும் நமக்காய்**

**உதவிட உளந்தனில் உன்னிக்**

**கடல் பல கடந்து தேசத்தை விடுத்துக்**

**கதித்திடு சுதந்திரம் விடுத்து**

**படரும் பெரிய பாடுகள் பட்டுப்**

**பணிக்கெனத் தமையர்ப் பணித்த**

**திடமுள மனத்து மிஷனரிமாரின்**

**செய்ந்நன்றி காத்தல் நம் கடனே**

(புலவர் மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலையில் மெதடிஸ்த திருப்பணி வரலாற்றுக் குறிப்புகள்

நான் தற்போது ஐரோப்பாவுக்கு மரித்தவனும் இந்தியாவுக்கு வாழ்பவனுமாய் இருக்கின்றேன். "இலங்கைக்குப் போ" என்று கடவுளே என்னிடம் சொன்னார்... நான் இலங்கைக்குப் போகாதிருப்பதை விட அங்கு போய் அந்த நாட்டின் கரையில் ஆடையற்ற நிர்வாணியாயும், நண்பர் எவரும் அற்றவனாயும் இருப்பேன் என்ற இறைவனின் திருச்சித்தத்தைப் பரிபூரணமாய் ஏற்றுக்கொள்கின்றேன்".

இவை கலாநிதி தோமஸ் கோக் அவர்கள் 1813 இல் தன் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தின் பிரதித்தி பெற்ற வாக்கியங்கள் இவ்வாறான தரிசனத்தோடு இலங்கையின் திருப்பணிக்கெனத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவராக ஆறு பேர் கொண்ட திருமறைத் தொண்டர் குழுவுக்குத் தலைமை தாங்கி கலாநிதி தோமஸ் கோக் 1813ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி தமது கடல் வழிப்பயணத்தை ஆரம்பித்தார். குழுவில் ஒருவரான வில்லியம் ஒல்ட் அவர்களின் துணைவியார் 1814 பெப்ரவரி 10ம் திகதி கப்பலிலேயே காலமானார். அதே வருடம் மே மாதம் 2ம் திகதி கலாநிதி கோக் அவர்களும் கப்பலிலேயே மரணித்துக் கடலில் அடக்கம் செய்யப்பட்டார். ஆறு மிஷனரிமாரில் திரு. ஹார்வர்ட் என்பவர் பம்பாயில் தங்கி நிற்க ஏனைய ஐவரும் 1814ம் ஆண்டு யூன் மாதம் 29ம் திகதி இலங்கைத் திருநாட்டின் காலிக்கரையில் கால்பதித்தனர். அன்று தான் இலங்கையில் மெதடிஸ்த திருச்சபையின் வரலாறு ஆரம்பமாகியது.

அந்த வரலாற்றின் முதல் தசாப்தத்தில் திருப்பணி ஆரம்பிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாகத் திருக்கோணமலையைக் காண்கின்றோம். 1816இல் ''ஆசியத்திருப்பேரவை'' என்ற பெயரில் திருப்பேரவை கூடியது. அங்கு தீர்மானிக்கப்பட்டதன் பேரில் சாமுவேல் ப்ரோட் பென்ற் என்னும் திருப்பணியாளர் திருக்கோணமலைக்கு நியமிக்கப்பட்டு 1817ல் இங்கு வந்து இறைபணியை ஆரம்பித்தார். 1818இல் ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டதாயினும் கட்டிட வேலை தொடரவில்லை. 1821இல் ஆலயம் உருவானது.

1821 இற்கும் 1828 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் திருக்கோணமலை திருப்பணியாளர்களின் மாற்றங்கள் பல இடம்பெற்றன. 1821இல் றொபர்ட் கார்வர் என்பவரின் நியமனம் தீர்மானிக்கப்பட்டது. 1822இல் யோசப் பொட் நியமிக்கப்பட்டார். 1827இல் பீற்றர் பேர்சிவல் அவர்கள் திருக்கோணமலைத் திருப்பணியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் தமிழ்மொழியை நன்கு கற்று அதில் புலமை மிக்கவராக விளங்கியதோடு, ஆறுமுகநாவலர் அவர்களோடு சேர்ந்து திருமறையைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணிகளிலும் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1820 இற்கும் 1823 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மெதடிஸ்த மிஷனரிமாரினால் மூன்று பாடசாலைகள் திருக்கோணமலையில் நடத்தப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஆங்கிலப் பாடசாலை. அது மிசன் வீட்டிலேயே நடத்தப்பட்டது. ஏனைய இரண்டும் சின்னக்கடைப் பகுதியில் ஒன்றும், புதுக்கடைப் பகுதியில் ஒன்றுமாக நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. 1856 இல் ஜோன் வால்ற்றன் என்னும் மிஷனரியின் காலத்தில் அன்னாரது துணைவியார் ''விற்பனை'' ஒன்றை நடத்தி அதன் மூலம் பெறப்பட்ட 50 பவுண் வருமானத்தைக் கொண்டு ''பெண்கள் பாடசாலைக்கான அறை'' யொன்றைக் கட்டுவதற்கு உதவினார். இப்பாடசாலை அறை ஆலய வளவிலேயே அமைக்கப்பட்டது. 1859 இல் பெண்கள் பாடசாலைக்கெனத் தனியான கட்டடம் உருவானது. ஆரம்ப காலத்திலிருந்தே இருந்து வந்த மூன்று பாடசாலைகளுக்கும் பெற்றா பாடசாலை, குறொவ்ற் வீதிப்பாடசாலை, பெருந்தெருப் பாடசாலை என்ற பெயர்களும் வழங்கப்பட்டு வந்திருப்பதை வரலாற்றில் காணமுடிகிறது.

திருக்கோணமலை நகரில் ஆரம்ப காலத்திருப்பணி அப்போது இங்கு வாழ்ந்த ஆங்கிலேயர், பறங்கியர் போன்றவர் மீதே கூடுதலான கரிசனை மிக்கதாக அமைந்திருந்நது. கடற்படை மற்றும் இராணுவத் தளங்களிலிருந்த ஆலயங்களின் குருமாராகவும் அப்போதைய மிஷனரிமார் பணியாற்றியிருக்கிறார்கள். 1830 இற்குப் பிந்திய காலப்பகுதியில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தமிழ் பேசும் சுதேசிகளான' குருமார்கள் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் திருப்பணி வலுப்பெற்ற நிலையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. திருக்கோணமலையில் கில்னர் என்னும் மிசனரியின் திருப்பணிக்காலத்தில் மூன்று தமிழ் பேசும் குருமார் திருப்பணிக்கு அழைக்கப்பட்டனர். ஜேம்ஸ் ஒஸ்பர்ண், ஜோன் பிளெச்சர், போல் ஏகாம்பரம் ஆகிய இம்மூவரில் பிளெச்சர் அவர்கள் திருக்கோணமலையையே பிறப்பிடமாகவும் கொண்டவர் என வரலாற்றிலிருந்து அறிய முடிகின்றது.

திருக்கோணமலை மண்ணில் திருப்பணி வளர்ச்சி பெற்றமைக்கு ஆதாரமாகக் கந்தளாய் 1878 இலும், மூதூர் 1888 இலும் சேகரங்களாக்கப்பட்ட நிகழ்வுகளைக் குறிப்பிடலாம். 1874ல் சாம்பல்தீவுப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1884ல் திரியாய் பாடசாலைக்கு ரூ 170/- செலவில் கட்டடம் அமைக்கப்பட்டது. 1885இல் திருக்கோணமலைப் பெண்கள் விடுதிப் பாடசாலைக்கும் சில கட்டங்களும் சுற்று மதிலும் ரூ 1350/- செலவில் பூர்த்தியாக்கப்பட்டன.

1889 இற்குப பிற்பட்ட காலப்பகுதியில் திருக்கோணமலை நகரில் ஆங்கிலேய முகாமைக் குருமாருடன் தமிழ்க் குருமாரும் திருப்பணியில் ஈடுபடுத்தப்படடனர். நிலாவெளி, மூதூர் ஆகிய இடங்களிலும் தமிழர்களான குருமார் பணியாற்றத் தொடங்கினர். மூதூரில் 1900இல் குருமனை ஆரம்பிக்கப்பட்டது. அப்பகுதியில் கல்வியை வழங்குவதற்கென ஆறு பாடசாலைகள் மெதடிஸ்த திருச்சபையால் நடத்தப்பட்டன. 1908இல் அருட்திரு. போல் ஏகாம்பரம் அவர்கள் மூதூருக்கு நியமிக்கப்பட்டார். மூதூரில் அமைக்கப்பட்ட ஆலயம் 1917இல் திறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டது. 1906 இல் திருக்கோணமலைச் சேகரம் தனது சுய தேவைகளைத் தானே கவனித்துக் கொள்ளும் நிலையை அடைந்தமையை நிருபித்ததன் பேரில் ''ஏ'' தரச்சேகரமாக வகைப்படுத்தப்பட்டது. 1910 இல் ''மக்டுகல் தினைவு மருந்தகம்'' என்ற பெயரில் மருத்துவ நிலையம் ஒன்று பெருந்தெருவில் திறந்து வைக்கப்பட்டதையடுத்து மெதடிஸ்த திருச்சபை மருத்துவப்பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. செல்வி வெப் என்னும் திருப்பணியாளர் மருத்துவப் பணிக்கென இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்டார். முதலாம் வருடத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். பெண்கள் விடுதிப் பாடசாலையின் பழைய மாணவி ஒருவர் தாதியாகப் பயிற்சி பெறுவதற்குத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

பாடசாலைகளைப் பொறுத்தவரை 1889 இற்கும் 1930 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நகர்ப்பகுதியில் அமைந்திருந்த இரு பாடசாலைகள் முக்கியமானவையாக விளங்கின. அவற்றுள் ஒன்று ''திருக்கோணமலை ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை''. 1902 இற்குப் பின்னர் இப்பாடசாலை கணிசமான வளர்ச்சியடைந்தது. இடவசதி போதாமையால் புதிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. 1907 இல் மாணவர்கள் யூனியர் கேம்பிரிஜ் பரீட்சைக்குத் தோற்றினார்கள். 1930 இல் ஆங்கிலப் பாடசாலையை மூடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் அதே கட்டடங்கள் இரு மொழிமூலப் பெண்கள் பாடசாலையால் பொறுப்பேற்கப்பட்டன.

பெண்கள் விடுதிப்பாடசாலையும் இக்காலப்பகுதியுள் நல்ல வளர்ச்சி கண்டது. மாணவர் எண்ணிக்கை அதிகரிக்க, புதிய கட்டடங்களும் உருவாகின. இருமொழி மூலக் கற்பித்தலும் முன்னேற்றமடைந்தது. மூடப்பட்ட ஆங்கிலப் பாடசாலைக் கட்டடங்களும் இப்பாடசாலைக்குச் சொந்தமாகின.

ஆங்கிலேய கடற்படை, இராணுவம் ஆகியவற்றில் கடமை புரிந்தவர்கள் திருச்சபையின் நடவடிக்கைகளில் பெரும்பாலும் ஈடுபாடு காட்டினர். 1939 இற்கும் 1953இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 52 திருமண வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன. இவற்றில் 15 படையினரின் திருமணங்களாக இருந்தன. ஆங்கிலச் சபை, தமிழ்ச்சபை என இரு சபைகள் ஒரே ஆலயத்தில் வழிபட்டன. 1959இல் திருக்கோணமலைப் படைத்தளம் முழுமையாக இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அடுத்த ஐந்து வருடங்களில் படைகளில் இருந்த அனைத்து ஆங்கிலேயர்களும் திருக்கோணமலையை விட்டு வெளியேறினர். அதே காலப்பகுதியில் மெதடிஸ்த திருச்சபையிலும் ஒரு ஆங்கிலேய மிஷனரியும் தமிழ்க் குருவானவரும் ஒன்றாக இருந்த நிலை மாறி தமிழ் குருவானவரே முழுப்பொறுப்பையும் ஏற்கும் நிலை ஏற்பட்டது. அருட்திரு. எஸ். எம். ஜேக்கப் அவர்கள் இப்பணியை 1959 - 1963 காலப்பகுதியில் பொறுப்பேற்று நடத்தினார். ஏற்கனவே படையினர் இல்லமாக இருந்து வந்த கட்டடம் அவர்கள் வெளியேறியதை அடுத்து ''வெஸ்லி இல்லம்'' என்ற தற்போதைய பெயருடன் தொழில் புரியும் பெண்களின் விடுதியாக இயங்கத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் விடுதிப் பாடசாலையினது நிர்வாகமும் இலங்கையரின் கைக்கு மாறியது. முதலாவது இலங்கையரான அதிபராக செல்வி. எம். மாரிமுத்து அவர்கள் 1950 இல் நியமிக்கப்பட்டார். தொடர்ந்து வந்து ஆண்டுகளில் சேனையூர், குச்சவெளி, கும்புறுபிட்டி, நிலாவெளி, பெருந்தெரு, சாம்பல்தீவு, உப்புவெளி ஆகிய இடங்களில் இயங்கிவந்த பாடசாலைகளோடு "பெண்கள் விடுதிப் பாடசாலை"யும் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது.

1917இல் மூதூரில் அமைக்கப்பட்ட ஆலயம் அப்பிரதேசத்தில் வாழ்ந்த அனைத்துப் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மக்களுக்கும் பயனுடையதாக இருந்தது. 1962ல் பாடசாலைகள் அரசினால் பொறுப்பேற்கப்பட்டதைத் தொடர்ந்து மூதூர்ப் பகுதியில் மிஷன் பாடசாலைகளில் பணிபுரிந்த வெளியூர் கிறிஸ்தவ ஆசிரியர்கள் தத்தம் சொந்த இடங்களுக்குத் திருப்பிச் சென்றதால் சபை நடவடிக்கைகள் நிரந்தரமாக வாழ்ந்த ஒரு சில குடும்பங்களினாலேயே கவனிக்கப்பட வேண்டி ஏற்பட்டது.

இவ்வாறாக மாற்றங்களையும், சவால்களையும் சந்தித்துத் தொடர்ந்து பணிபுரிந்து வரும் திருக்கோணமலை மெதடிஸ்த சேகரத்தை இறைவன் ஆசீர்வதித்து வழிநடத்தி வந்திருக்கிறார். உலகெங்கும் பரந்து பணிபுரிகின்ற கிறிஸ்தவ திருச்சபையின் ஒரு அங்கமாக திருக்கோணமலை மண்ணிலும் மெதடிஸ்த திருச்சபை ஒளிபரப்பி நிற்கின்றதென்றால் அதற்குக் காரணம் இறைமைந்தர் இயேசுவின் அருளும், ஆசியுமே அன்றி வேறெதுவுமில்லை. தம்மை முற்றாக அர்ப்பணித்துப் பணிபுரிந்த, மிஷனரிமாரை இவ்வேளையில் நன்றியோடு நினைவு கூருவது நம் கடமையாகும். வருகின்ற காலங்களிலும் இச்சபையை இறைவன் வல்லமையாய் வழிநடத்திப் பிரார்த்திப்போம்.

ஆதாரம் : A History of the Methodist Church in Ceylon (1814 - 1964)

ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்.

(நீதிமொழிகள் 1:7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி வரலாற்றுப் பதிவு

வரலாறு ஒரு வரப்பிரசாதம். இது எல்லாத் தேசங்களிற்கும், எல்லா இன மக்களுக்கும் பொருந்தும். அந்த வகையில் ''ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில் மன்று திருக்கோணமலை" எனப் பழமையும் பெருமையும் பெறும் திருக்கோணமலை கிழக்கிலங்கையில் நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. காலங்கள் மாறும் போது கூடவே கருத்துக்களும் கலாச்சாரங்களும் மாறலாம். ஆனால் உண்மை வரலாற்றை மாற்ற முடியாது. திருக்கோணமலை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை வனப்புடன் கூடிய நகரம். மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட வெளிநாட்டவர்கள் ஆக்கிரமிப்பிற்கு உட்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாகும். வடக்கு கிழக்கு மக்களின் நடுநாயகமாகவும் விளங்குகின்றது. கிழக்கு மக்களின் வாழ்க்கை கோலங்களையும், வடக்கு மக்களின் பண்பாட்டு அடையாளங்களையும் இணைத்து நிற்கும் பாலமாகவும் இது விளங்குகின்றது என்பது அதன் பூகோள அமைப்புக்கள். கலாச்சாரங்கள் மக்களின் வாழ்வு முறைகள் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது.

1529ம் வருடத்திற்கும் அப்பால் மிக நீண்ட வரலாற்றில் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரான்ஷியர், பிரித்தானியர் ஆகிய வெளிநாட்டு படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு, பின் சுதந்திர தேசத்தின் ஓர் முக்கிய பிரதேசமாக விளங்கி வரும் இந்தப் பிரதேசத்தின் தொன்மை மிகு வரலாறும் மிக நீண்டதேயாகும்.

இத்தனை வரலாற்றுப் பதிவுகளுடன் தொன்மையும், பெருமையும் கொண்டு விளங்கும் அடையாளச்சின்னமே திருக்கோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரி ஆகும். 1814ஆம் ஆண்டில் மெதடிஸ்த திருச்சபையினர் இலங்கையின் வெலிகம கரையோரத்திற்கு வந்திறங்கியமை மெதடிஸ்த திருச்சபையின் கல்வி வரலாற்றில் ஒரு மைல்கல்லாக விளங்கியது எனலாம். இலங்கையின் கல்வித் தேவையை மேம்படச் செய்தல் வேண்டும் எனும் உயரிய நோக்குடன் நாட்டின் பல பாகங்களிலும் பாடசாலைகளை அமைத்தனர். அந்த வகையில் 1819ல் திருக்கோணமலையில் மெதடிஸ்த திருச்சபை அமைக்கப்பட்டு மெதடிஸ்த உயர்தரப் பாடசாலையும் (Mothodist High School) நிறுவப்பட்டது. 1912ம் ஆண்டில் பல வசதிகள் கொண்ட பாடசாலையாக மாற்றி அமைக்கப்பட்டது. 1821 - 1823 காலத்தில் மேலும் மூன்று பாடசாலைகள் றொபேர்ட் ஹாபர் தலைமையில் அமைக்கப்பட்டன. 1856ம் ஆண்டு ஜோன் வோட்டன் தலைமையில் திருச்சபைக்கு அருகில் தனியான கட்டிடத்துடன் இடமாற்றப்பட்டது. இதுவே இன்றைய எமது மெதடிஸ்த மகளிர் கல்லூரி ஆகும். இது ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் வேம்படிப்பாடசாலை என அழைக்கப்பட்டது. 1859ல் மேலும் பல கட்டிடங்கள் கட்டப்பட்டு மெதடிஸ்த பெண்கள் கல்லூரி என்ற பெயருடன் விடுதி வசதியும் கொண்ட ஒரு பாடசாலையாக விளங்கியது. 1902ம் ஆண்டளவில் மாணவர் தொகை மிக வேகமாக அதிகரித்தது. அதன் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌதீக வளங்களும் அதிகரிக்கப்பட்டன. இதன் காரணமாக திருக்கோணமலை மாவட்டத்தில் அதி உயர் வளர்ச்சியடைந்த பாடசாலையாக இது காணப்பட்டது.

இக்காலப் பகுதியில் இருநேரப் பாடசாலை நடைபெற்றதுடன் வார இறுதி நாளான சனிக்கிழமைகளிலும் பாடசாலை நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும். மாணவர் ஆசிரியர்களின் எண்ணிக்கை உயர்வாகக் காணப்பட்டது. அத்துடன் உடல், உள நலமேம்பாடு கருதிப்பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மாணவரிடையே சேமிப்புப் பழக்கம் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது. 1966ம் ஆண்டில் Mothodist English School ஆக பெயர் மாற்றப்பட்டது. தொடர்ந்தும் அதிபராக எம். அருமைநாயகமே பணியாற்றி உள்ளார். இந்தக் காலப்பகுதியில் வேம்படிப்பாடசாலை என்றும் இது அழைக்கப்பட்டுள்ளது. குடியரசு தினம், தமிழ்மொழித் தினம், பாரதிதினம், மகாத்மாகாந்தி தினம் போன்றன கொண்டாடப்பட்டுள்ளன.

அதிபர் எம். அருமைநாயகத்தின் காலப்பகுதியில் பல புதிய கட்டிடங்களும் கட்டப்பட்டன. பௌதீகவள அபிவிருத்தியுடன் ஆளணி வள அபிவிருத்தியுமாக பாடசாலை வளர்ச்சியடைந்து சென்றுள்ளது. இவர் 1975 வரை அதிபராக கடமையாற்றினார். 1930ல் செல்வி. எவரெட்டும் அதன் பின்னர் செல்வி. கார்டினரும் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடத்தினர். 1938ல் கிறீன்வூட் இப்பாடசாலையின் அதிபர் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார். 1942 - 1945ல் இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற பொழுது பாதுகாப்பு கருதி மாணவர்களை வேறு இடம் மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் பாடசாலை நிர்வாகத்தில் பின்னடைவு ஏற்பட்டது. 1949இல் இந்தப் பாடசாலையின் பழைய மாணவியும், ஆசிரியராகவுமிருந்த செல்வி. அருமைநாயகம் மங்கயர்க்கரசி முதலாவது இலங்கையின் அதிபராக இப்பாடசாலையை பொறுப்பேற்றமையும் இவரது காலத்தில் பாடவிதானம், இணைப்பாடவிதானம் போன்றவற்றில் மாணவர்கள் மிகவும் உன்னதமான ஆற்றல்களை வெளிப்படுத்தியமை வரலாற்றுப் பதிவுகளிலிருந்து அறியக்கூடிய செய்திகளாகும். அதன் பின்னர் 1975 - 1985 வரை திருமதி. இ. ஆர். குணரெட்ணம் அதிபராகக் கடமையாற்றினார். இவரது காலத்தில் மாணவர் பல துறைகளிலும் தமது ஆற்றல்களைப் பதிவு செய்துள்ளனர். குறிப்பாக NCGE, HNC பொதுப் பரீட்சைகளில் சிறப்பான பெறுகைகளைப் பெற்றிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்துள்ளது. ஐக்கியநாடுகள் தினம், சர்வதேச மகளிர் தினம் என்பவையும் அனுஷ்டிக்கப்பட்டதுடன் புதிய விடுதிக்கட்டிடம் ஒன்றும் இக்காலப்பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 1985 - 1986 வரை ஓராண்டு திரு. N. சந்திரகாந்தன் அதிபராக கடமையாற்றினார்.

அவரைத் தொடர்ந்து 1986 - 1990 வரை திருமதி. எம். சோமசுந்தரம் அதிபராக பொறுப்பேற்றுக் கடமையாற்றினார். இவரது காலப்பகுதியிலும் கல்லூரி தொடர்ந்தேர்ச்சியான வளர்ச்சிப் போக்கைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவரைத் தொடர்ந்து 1991 - 2001ம் ஆண்டுவரை செல்வி. கே. பொன்னம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராகக் கடமையாற்றினார். இக்காலப்பகுதியிலும் பாடசாலையில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. விபுலானந்தர் தினம், பரிசளிப்பு விழா, Thinking Day என்பன கொண்டாடப்பட்டுள்ளன. புதிய மாடிக்கட்டிடம், விஞ்ஞான ஆய்வுகூடம் என்பனவும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. தர்மவார நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன. குறளமுதப் போட்டி, விளையாட்டுப் போட்டி, பொருட்கண்காட்சி என்பனவும் இடம்பெற்றுள்ளன. தொடர்ந்து 2001ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை (2014) திருமதி. உ. ஜோதிநாதன் அதிபராகப் பொறுப்பேற்று மிகச்சிறப்பான முறையில் இயங்கிக் கொண்டிருப்பதை குறிப்பிட்டேயாக வேண்டும். கல்வியின் பிரதான இலக்கான உள்ளார்ந்த ஆற்றல்களை விருத்தி செய்வதற்கும் நிகழ்கால தேவைகள் கருதிய இலக்குடன் மாணவரின் பூரண வளர்ச்சிக்கான செயற்பாடுகளை நன்கு திட்டமிட்டு வகுத்து நடைமுறைப்படுத்தி வரும் இவரது தந்திரோபாய திட்டமிடலும் மற்றும் ஆசிரிய திறன் விருத்தி நடவடிக்கைகளும் பாடசாலையின் நிலைத்த வளர்ச்சிக்கும் நுண்கல்வி அறிவுத்திறத்திற்கும் இட்டுச் செல்கின்றன என்றால் மிகையாகாது. அறிவு, திறன், மேம்பாடுகளுடன் பூரண ஆளுமையும் கொண்ட சமுதாயம் எனும் உன்னத சமுதாயத்தினை கட்டியெழும்பும் மகோன்னத தூர நோக்கினைக் கொண்டு கல்லூரியின் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன. இத்தகைய சகல செயற்பாடுகளிலும் உச்ச உயர்வை அடைய முழு முயற்சி (Utmost for the Highest) எனும் கல்லூரியின் மகுட வாகசம் மணிமுடியாய் இருப்பதும் சிறப்பம்சம் எனலாம். கல்லூரியின் சகல வளங்களும் உச்ச உயர்வை அடைவதையே நோக்காகக் கொண்டு பயன்படுத்தப்படுவதன் காரணமாக செயலாளிகளும் பயனாளிகளுமே பெறுகைகளாக கிடைக்கின்றனர். ''21ம் நூற்றாண்டிற்கான சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களுக்கு கற்றல் வசதிகளையும் வழிகாட்டல்களையும், பயிற்சிகளையும் அளித்தல் மூலம் பெறுமதிமிக்க திறன்கள் நிறைந்த பூரண ஆளுமை உடையவர்களாக வெளியேற்றி தமது சமூகத்தின் அபிவிருத்திக்கு உழைப்பவராக்கல்'' எனும் காத்திரமான பணிக்கூற்றினூடாக பூரண ஆளுமை உடைய பிரஜைகளை உருவாக்குவதற்கான கொள்கையாகக் கொண்டு கல்லூரி தனது நாளாந்த பணிகளை முன்னெடுகின்றதென்றால் அது கல்லூரியின் உள்ளக அங்கத்தவர்களை மட்டுமன்றி கல்லூரியுடன் இணைந்திருக்கின்ற எனைய வெளியக அங்கத்தவர்கயையும் சார்ந்ததாகும். எனவே அந்தவகையில் சீரிய சமுதாயத்தை கட்டியெழும்பும் நன்மதிப்பு மிக்க கல்விப்பணியில் பயணிக்கும் எம் கல்லூரிப் பயணத்தில் என்றும் இணைந்திருக்கும் மெதடிஸ்த திருச்சபையினரது ஆக்கபூர்வமான ஒத்துழைப்புக்களை மெதடிஸ்த திருச்சபை வருகையின் 200 ஆண்டுப் பூர்த்தியின் போது நன்றியுடன் நினைவு கூர்வதில் எம் கல்லூரி புளகாங்கிதம் அடைகின்றது.

அதிபர்/ஆசிரியர்கள்/பா.அ.குழு/ப.மா.ச
தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/கும்புறுபிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை வரலாறு

இலங்கைக்கு மெதடிஸ்தமிசன் திருச்சபை கால்பதித்து இருநூறாவது ஆண்டை 2014 நிறைவு செய்வதன் நிமித்தம் திருச்சபைக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கும்புறுபிட்டி கிராமத்திற்கு இன்றைக்கு 129 வருடங்களுக்கு முன் கல்வி அறிவைப் புகட்டி சமூகத்தை கல்வியின் பால் இட்டுச் செல்வதற்கு முனைந்து நின்று தி/கும்புறுபிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையை ஆரம்பித்த சமூக கைங்கரியத்திற்கு பாடசாலை அதிபர் என்ற முறையில் மெதடிஸ்த மிசன் திருச்சபைக்கு, மனமார்ந்த நன்றியினை அறியத்தருகின்றேன். அதனைத் தொடர்ந்து பல்வேறு காலகட்டங்களை தாண்டி பாடசாலை இன்று ஓர் தரம் II பாடசாலையாக சமூகத்திற்கு கல்விப் பணியாற்றி வருகின்றது. எமது கிராமத்தை கல்வி அறிவுமிக்க சமுதாயமாக மாற்றி தரமான கல்வியின் ஊடாக தரமான சமூகம் என்ற இலக்கை நோக்கி பயணிக்கின்றது. எமது கனவு மெய்ப்பட எல்லாம் வல்ல இறைவனின் ஆசியினை வேண்டி பாடசாலை வரலாற்றை சமர்ப்பிக்கின்றேன்.

தி/கும்புறுபிட்டி மெதடிஸ்தமிசன் தமிழ் கலவன் பாடசாலை 1885 ஆரம்பிக்கப்பட்டதாக அறிய முடிகிறது. பாடசாலையின் 128 வருடகால வரலாற்றை தேடியறிந்து தொகுப்பதென்பது சற்றுக் கடினமான காரியமாகும். 1983ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையும் 1990ஆம் ஆண்டில் ஏற்பட்ட கிராமத்தின் இடப்பெயர்வும் பாடசாலை சேதமுற்று அழிவடைந்த நிலையில் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் உள்ள தகவல்கள் எல்லாம் அழிவுக்குட்பட்டதும் துரதிஷ்டவசமான சம்பவங்களே. இருந்த போதிலும் பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள் ஆசிரியர்களிடம் கிடைக்கப்பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றின் சில சம்பவங்களை இங்கு பதிவு செய்கின்றேன்.

இங்கு தரப்படுகின்ற விடயங்கள் அனைத்தும் உரியவர்களை நேரடியாக சந்தித்து அவர்கள் மூலம் பெறப்பட்ட தகவல்கள் என்பதை அறியத் தருகின்றேன். 03.05.1960ஆம் ஆண்டு கந்தையா ஜெபரட்ணம் என்பவரை ஆசிரியராக மெதடிஸ்தமிசன் நியமித்தது. அக்காலத்தில் கனகசபை கஜரெத்தினம் என்பவர் அதிபராக கடமையாற்றினார். இவரும் மெதடிஸ்தமிசன் மூலம் நியமனம் பெற்றவர் என்பதை அறியமுடிகிறது. அக்காலத்தில் சுமார் 150 மாணவர்கள் கல்வி கற்றார்கள் என்பதை க.ஜெபரட்ணம் ஆசிரியர் மூலம் அறிய முடிகிறது. பின்னர் இவர் அதிபராக கொத்தணி அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

தி/கும்புறுபிட்டி மெதடிஸ்தமிசன் தமிழ் கலவன் பாடசாலையில் திரு.க.ஜெபரட்ணம் ஆசிரியர் 03.05.1960 - 01.09.1961 வரை கடமையாற்றினார் என்பதை அறியமுடிகிறது. திரு.க.கஜரெத்தினம் அவர்களுக்கு முன் டேவிட் சில்வா என்பவர் அதிபராக கடமையாற்றினார் என்பதை அறியமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை வரலாற்றில் 1969ம் ஆண்டு திரு. கு. பாலச்சந்திர ஐயர் இப் பாடசாலைக்கு ஆசிரியராக செல்கிறார். இவர் வைத்திய கலாநிதி கு. ஹேமச்சந்திராவின் தமையனாவார். இவர் தனது துணைவியான உஷாதேவி பாலச்சந்திரஐயர் அவர்களுடன் அக்கிராமத்திலுள்ள பிள்ளையார் கோவிலில் தங்கியிருந்து கல்விப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. 1969ம் ஆண்டு திரு. அந்தோனிப்பிள்ளை அதிபரானார். இவ்வாறான காலப்பகுதியில் பாலச்சந்திரஐயரின் மனைவி திருமதி. பா. உஷாதேவி அம்மா 1970ம் ஆண்டு இப்பாடசாலையில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்றார்.

அந்தோனிப்பிள்ளை அதிபரைத் தொடர்ந்து திரு. தம்பிப்பிள்ளை இரத்தினவேல் அவர்கள் இப்பாடசாலையில் அதிபராகப் பொறுப்பேற்று 1972ம் ஆண்டு காலப்பகுதியில் கணிசமான காலம் அதிபராக இருந்தார் என்பது திருமதி. பா. உஷாதேவி பாலச்சந்திரஐயர் மூலம் அறிய முடிகிறது. பாலச்சந்திரஐயர் தற்சமயம் இல்லை இறையடி அடைந்துவிட்டார். திரு. தம்பிப்பிள்ளை இரத்தினவேல் அதிபர் அவர்கள் தற்சமயம் தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நிர்வாகத்திற்குப் பொறுப்பான பிரதி அதிபராக கடமையாற்றும் திரு. இ. முருகதாஸ் அவர்களின் தந்தையாவார்.

திரு. தம்பிப்பிள்ளை இரத்தினவேல் அதிபர் அவர்கள் 1972ம் அண்டு பாலச்சந்திர ஐயரிடம் கையளித்துச் செல்கின்றார். 1972ஆம்ஆண்டு தொடக்கம் 1983ம் ஆண்டு வரை திரு. கு. பாலச்சந்திர ஐயர் அதிபராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் இக்கிராமத்திலுள்ள கத்தோலிக்க தேவாலயத்தின் வணக்கத்துக்குரிய பிதா செல்லர் பாடசாலை வளர்ச்சியிலும் மாணர்களின் கல்வி வளர்ச்சியிலும் கூடிய அக்கறை செலுத்தியதை அறியமுடிகிறது.

1972ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருமதி தில்லைநாதன் என்பவரும் இராஜேஸ்வரி, திருமதி. சத்தியமூர்த்தி ஆகிய மூவரும் இப்பாடசாலையில் முதல் நியமனத்தைப் பெற்றுக் கொண்டனர். இக்காலப்பகுதியில் வகுப்பு 01 தொடக்கம் 5 வரையுமே இருந்தது. இதற்கு ஒரு கட்டிடம் மட்டுமே இருந்தது.

1974ஆம் ஆண்டு பிரதம கல்வி அதிகாரியாக இருந்த திரு. சலீம் அவர்களின் காலப்பகுதியில் பாடசாலைக்கு ஒரு புதிய கட்டிடம் கிடைத்தது. பாடசாலை வரலாற்றில் 1975ஆம் ஆண்டு காலப்பகுதியில் வகுப்பு 6 ஆரம்பிக்கப்பட்டது. 1975ஆம் ஆண்டு ஆசிரியர் விடுதி கிடைக்கப் பெற்றது. அக்காலப்பகுதியில் திரு. கு. பாலச்சந்திரஐயர் விடுதியில் குடியேறி பாடசாலை வளர்ச்சியில் அக்கறை செலுத்தியுள்ளார்.

1975ஆம் ஆண்டு திரு. நா. சத்தியமூர்த்தி
திருமதி. ரோகினி ஜோதிநாதன்
திருமதி. சுலோசனா தேவராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோர் ஆசிரியர்களாக முதல் நியமனம் பெற்றனர். இவர்களில் திரு. நா. சத்தியமூர்த்தி தி/செல்வநாயகபுர இந்து மகாவித்தியாலய அதிபராக இருந்து ஓய்வு பெற்றுள்ளார். திருமதி. ரோகினி ஜோதிநாதன் இன்று திருக்கோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்காலப்பகுதியில் தமிழ் மொழித்தினப் போட்டிக்கு மாணவர்கள் தேசிய மட்டம் வரை சென்றதாக திருமதி. பா. உஷாதேவி அம்மா மூலம் அறிய முடிகிறது. தற்சமயம் தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நிர்வாகத்திற்குப் பொறுப்பான பிரதி அதிபரான திரு. செ. சண்முகநாயகம் இப்பாடசாலையின் பழைய மாணவராவார்.

மேலும் 1979 ஆம் ஆண்டு பாடசாலைக்கு மற்றுமொரு புதிய கட்டிடம் கிடைக்கப்பெற்றது. பாடசாலையின் வரலாற்றில் 1981 அல்லது 1982ஆம் ஆண்டு காலப்பகுதியில் க.பொ.த. சா/தர பரீட்சைக்கு மாணவர்கள் முதன்முதல் தோற்றினர்.

1982ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்று திருமதி உஷாதேவி பாலச்சந்திரஜயர் தி/புனித சூசையப்பர் கல்லூரிக்கச் சென்றார். இதனைத் தொடர்ந்து 1983ஆம் ஆண்டு திரு. பாலச்சந்திரஜயர் இடமாற்றம் பெற்று லிங்கநகர் கோணலிங்கம் வித்தியாலயத்திற்கு சென்றதாக அறிய முடிகிறது.

06.5.1989ஆம் ஆண்டு முதல் திரு. க. தயானந்தகுரு அவர்கள் அதிபராக இருந்துள்ளார். இவரின் காலத்தில் 1990ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பாடசாலையில் க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவை ஆரம்பித்து வகுப்புக்கள் நடைபெற்றதாக அதிபர் மூலம் அறியமுடிகிறது. எனினும் அனுமதி வழங்கப்பட முன் நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால் கிராமத்து மக்கள் இடப்பெயர்வைச் சந்தித்தனர். 14.06.1990 முதல் பாடசாலை மூடப்பட்டு மீண்டும் 01.08.1990 பாடசாலை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருந்த போதிலும் 10.01.1996ஆம் ஆண்டுவரை பாடசாலை மூடப்பட்டு 10.01.1996ஆம் ஆண்டு அதே இடத்தில் பாடசாலை இயங்க முற்பட்டது. ஆனால் மாணவர்கள் எவரும் சமுகமளிக்கவில்லை. 01.03.1997ஆம் ஆண்டு அதிபர் திரு. க. தயானந்தகுரு தி/கப்பல்துறை அ.த.க.பா இற்கு இடமாற்றம் பெற்றுச் செல்கிறார்.

01.03.1997ம் ஆண்டு அதிபர். திரு. சண்முகராஜா அதிபராகக் கடமையேற்றார். 28.01.1998ஆம் ஆண்டு பாடசாலை இப்போதிருக்கும் இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. இதன்பின் அதிபர்களாக திரு. எஸ்.மகேஸ்வரன், திரு. க. தர்மரெத்தினமுதலி, திரு. பெ. ஐயமுத்து போன்றோர் கடமையாற்றி இன்று திரு.வி.இராஜேந்திரன் அதிபராகக் கடமையாற்றி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்களின் விபரங்களை தெரிந்தவரை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

| | | |
|---|---|---|
| 01. | திரு. டேவிட் | |
| 02. | திரு. நெல்லிநாதன் சாமுவேல் ஒப்பிலாமணி | |
| 03. | திரு. க. கஜரெத்தினம் | |
| 04. | திரு. க. கதிரவேற்பிள்ளை | |
| 05. | திரு. வேலுப்பிள்ளை | |
| 06. | திரு. கு. பாலச்சந்திரஜயர் | |
| 07. | திரு. எஸ். கிருபைராஜா | |
| 08. | திரு. மு. பொன்னுக்கோன் | |
| 09. | திரு. க. தயானந்தகுரு | 06.05.1989 - 01.03.1997 |
| 10. | திரு. த. சண்முகராஜா | 01.03.1997 - 26.07.1998 |
| 11. | திரு. எஸ். மகேஸ்வரன் | 27.07.1998 - 20.11.2000 |
| 12. | திரு. க. தர்மரெத்தினமுதலி | 18.06.2001 - 05.01.2010 |
| 13. | திரு. பெ. ஐயமுத்து | 06.09.2010 - 27.09.2012 |
| 14. | திரு. வி. இராஜேந்திரன் | 01.10.2012 - இன்றுவரை |

என்னால் முடிந்தளவுக்கு பாடசாலையின் வரலாற்றை தொகுத்தளித்துள்ளேன். இவ்வரலாற்றை தொகுப்பதற்காக தகவல்களை வழங்கிய அதிபர் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகட்டும்.

திரு. வி. இராஜேந்திரன்
அதிபர்
தி/கும்புறுபிட்டி மெதடிஸ்தமிசன் தமிழ்
கலவன் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/பெருந்தெரு விக்நேஸ்வரா மகா வித்தியாலயம் 190 வருடச் சுவடுகள்

பூமிப் பந்தில் இறைவன் வரைந்து வைத்த ஓவியங்களாக நாடுகளும் அவற்றின் எழில்களும் அமைந்துள்ளன. இந்த ஓவியங்களில் காலக் கவிஞன் எழுதுகின்ற கவிதைகளாக நாடுகளின் வரலாறுகள் மிளிர்கின்றன. இந்து சமுத்திரத்தின் அலைகரங்களில் தவழும் முத்தென விளங்கும் இலங்கைத் திருநாட்டிற்கும் தொன்றுதொட்டு இன்று வரை பல்வேறுபட்ட வரலாறுகள் உண்டு. கேந்திர முக்கியத்துவமுடைய அமைவிடத்தைக் கொண்டிருப்பதனால் அந்நியராட்சிக்கு உட்பட்டமையும் அதன் தாக்கத்தை இன்று வரை கொண்டுள்ளமையும் இலங்கையின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

அந்நியர்களது ஆட்சிக்காலத்தில் இலங்கையின் நிர்வாகம், பொருளாதாரம், சமயம், கல்வி போன்ற துறைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சமயத்திலும் கல்வியிலும் ஏற்பட்ட மாற்றங்கள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவையாகக் காணப்பட்டன. ஏனெனில் இலங்கையை ஆண்ட ஐரோப்பியர்கள் தமது சமயத்தைப் பரப்புவதற்கான ஓர் ஊடகமாகவே கல்வியைப் பயன்படுத்தியுள்ளனர். சமயத்தைப் பரப்பும் பொருட்டு பல்வேறுபட்ட கிறிஸ்தவ மதச் சபைகள் இலங்கையில் செயற்பட்டு வந்துள்ளன. இவற்றுள் லண்டன் மிஷனரிச் சபை, பப்ரிஸ்ற் சபை, மெதடிஸ்த சபை, சேச் மிஷனரிச் சபை, அமெரிக்க மிஷன் ஆகிய சபைகள் குறிப்பிடத்தக்கவையாகும். இலங்கையில் பரவலாகப் பாடசாலைகளை ஸ்தாபித்து இற்றை வரையும் கல்வி வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற சபையாக மெதடிஸ்த திருச்சபை விளங்குகின்றது. இங்கு இச்சபை சார்பாக பணியாற்றுவதற்காக கலாநிதி தோமஸ்கோக் அவர்களின் தலைமையில் ஆறு பேர்கொண்ட குழுவொன்று 1813ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ம் திகதியன்று தமது கடல் வழிப் பயணத்தை ஆரம்பித்தது. ஆயினும் இலங்கையை அடைய முன்னரே 1814ஆம் ஆண்டு மே மாதம் 2ம் திகதி கலாநிதி தோமஸ் கோக் அவர்கள் கப்பலிலேயே மரணித்து இறைவனுக்குள் அடைக்கலமானார். இறைபணிக்கெனத் தம்மை அர்ப்பணித்த அவரது திருப்பணிக் குழுவினர் இத்துயரெனும் தடையினால் தளர்ந்து விடாது பயணத்தைத் தொடர்ந்து 1814ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி இலங்கையின் காலிக் கரையோரத்தை வந்தடைந்தனர். அன்றிலிருந்தே இலங்கையில் மெதடிஸ்த திருச்சபையின் வரலாறு தோற்றம் பெற்றது.

மெதடிஸ்த திருச்சபை இலங்கையின் கரையோரப் பகுதிகளிலேயே தனது ஆரம்ப காலப் பணிகளைச் செயற்படுத்தியது. கரையோரப் பிரதேசங்களில் அமைந்துள்ள நகரங்களுள் திருக்கோணமலை அதிமுக்கியத்துவம் பெற்ற நகரமாகக் கருதப்படுகின்றது. வரலாற்று முக்கியத்துவம் மட்டுமன்றி உலகப் புகழ்பெற்ற இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டுள்ளமையால் பொருளாதார முக்கியத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையதாகவும், திருக்கோணமலை விளங்குகின்றது. கிழக்கிலங்கையின் தலைநகராகக் கருதப்படும் திருக்கோணமலையில் 1817ஆம் ஆண்டு ''சாமுவேல் பிரோட் பென்ற்'' எனும் திருச்சபைக் குருவானவரால் இறைபணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மெதடிஸ்தத் திருச்சபையின் பல்வேறு பணிகளில் மெதடிஸ்த ஆலயங்களை ஸ்தாபித்தமையும் மெதடிஸ்த திருச்சபைப் பாடசாலைகளை ஆரம்பித்தமையும் தலையாய பணிகளாகக் கருதப்படுகின்றன. திருக்கோணமலையில் தற்போது பெரிய கடை என அழைக்கப்படும் பகுதியில் அமைந்துள்ள 193 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மெதடிஸ்த ஆலயத்துக்கான அடிக்கல் 1818இல் நாட்டப்பட்டு 1821ஆம் ஆண்டு கட்டிடப் பணிகள் பூர்த்தியடைந்து ஆலயம் முழுமை பெற்றது.

1821ஆம் ஆண்டு திருக்கோணமலைக்குரிய திருப்பணியாளராக ''றொபர்ட் கார்வர்'' அவர்கள் நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து 1822இல் ''ஜோசப் பொட்'' அவர்கள் நியமிக்கப்பட்டார். இவர்களது காலத்தில் அதாவது 1820 இற்கும் 1823 இடைப்பட்ட காலத்தில் திருக்கோணமலையில் மூன்று பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றுள் ஒரு ஆங்கிலப் பாடசாலை திருச்சபை இயங்கிய வீட்டிலேயே நடாத்தப்பட்டது. ஏனைய இரண்டு பாடசாலைகளில் ஒன்று சின்னக்கடைப் பகுதியிலும் மற்றையது புதுக்கடைப் பகுதியிலும் அமைந்திருந்தன. சின்னக்கடைப் பகுதியில் அமையப்பெற்ற பாடசாலையே இன்றைய தி/பெருந்தெரு விக்னேஸ்வர மகாவித்தியாலயமாகும். ஆரம்ப காலத்தில் மெதடிஸ்த திருச்சபையின் மூன்று பாடசாலைகளும் ''பெற்றா பாடசாலை'' ''குறாவ்ற் வீதிப் பாடசாலை'' பெருந்தெருப் பாடசாலை எனும் பெயர்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளன. இதனடிப்படையில் சின்னக்கடைப் பகுதியில் பெருந்தெருவில் பாடசாலையின் அமைவிடம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் ''பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலை'' என்னும் பெயரால் அழைக்கப்பட்ட இந்தப் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்ட சரியான திகதி அறியப்படவில்லை. எனினும் 1820 இற்கும் 1823இற்கும் இடையில் ஸ்தாபிக்கப்பட்டமைக்குரிய சான்றுகள் உள்ளமையால் பிந்திய காலப் பகுதியான 1823ஆம் ஆண்டே இன்றைய தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகாவித்தியாலயத்தின் ஆரம்ப ஆண்டாகக் கொள்ளப்படுகின்றது.

இலங்கையில் ஐரோப்பிய ஆட்சியாளர்களின் அனுசரணையுடன் இயங்கி வந்த திருச்சபைப் பாடசாலைகள் கிறிஸ்தவ சமயத்திற்கும் ஆங்கில மொழிக்குமே முக்கியமளித்து வந்தன. பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையும் ஆரம்ப காலத்தில் இந்த அடிச்சுவட்டையே பின்பற்றியது. பாடசாலையின் ஆரம்ப கால அதிபர்கள் பற்றிய விபரங்கள் பூரணமாகக் கிடைக்கப்படவில்லை. அயினும் 1885ஆம் ஆண்டில் மயில்வாகனம் முருகுப்பிள்ளை எனும் உபாத்தியாயர் பாடசாலையின் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டதாக அறிய முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1858இல் யாழ்ப்பாணம் வடமராட்சியில் பிறந்த முருகுப்பிள்ளை அவர்கள் தமது இருபத்தைந்து வயதளவில் திருக்கோணமலைக்கு வந்து மெதடிஸ்த திருச்சபையால் நடாத்தப்பட்ட கோட்டடிப் பாடசாலையின் ஆசிரியராக நியமனம் பெற்றார். 1885ஆம் ஆண்டில் பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையின் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். ஓரளவு வளர்ச்சி கண்டு நிலையாகிவிட்ட பாடசாலை இக்காலப் பகுதியில் மேலும் விருத்தியடையத் தொடங்கியது. சின்னையா உபாத்தியார் இரண்டாவது உபாத்தியாராகவும் வெற்றிவேலு, கோபாலப்பிள்ளை, கதிர்காமர் என்பவர்கள் ஆசிரியர்களாகவும் நியமிக்கப்பட்டனர். திருக்கோணமலையின் பெரியார்கள் பலர் பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கல்வி கற்று உயர்கல்வியும் பெற்று சமூகத்திலும் சிறப்பு பெற்றவர்களாக விளங்கியுள்ளனர். இக்காலகட்டத்தில் கல்வி கற்றவர்களில் கிருஷ்ணதாசன், டாக்டர் சித்திரவேல், துரையப்பா, அரசரத்தினம், கிருஸ்ணபிள்ளை போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ம. முருகுப்பிள்ளை அவர்களுக்குப் பின்னர் பண்டிதர் சபாபதி தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்து இரத்தினசிங்கம், செபரத்தினம் ஆகியோரும் இன்னும் பலரும் கடமையாற்றியுள்ளார்கள். 1931 தொடக்கம் 1951 வரையான இரு தசாப்த காலப் பகுதியில் ''ஆசிரியமணி'' திரு. ம.க.சிதம்பரப்பிள்ளை அவர்கள் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். 1952 ஆம் ஆண்டளவில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர வகுப்பு பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. 1959 தொடக்கம் 1962 வரையான காலப் பகுதியில் ''ஆசிரியமணி'' திரு. ம.க.சிதம்பரப்பிள்ளை அவர்கள் மீண்டும் அதிபராகக் கடமை ஆற்றியுள்ளார்.

இக்காலப்பகுதியில் சின்னக்கடை, இலிங்கநகர், சாம்பல்தீவுப் பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழ் மெதடிஸ்த மக்களுக்கு தமிழ் மூலமான வழிபாட்டுக்கான ஒரு இடத்தின் தேவை உணரப்பட்டது. அதனை நிறைவு செய்யுமுகமாக பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் தமிழ்மொழி மூலமான பிரார்த்தனைகளும் வழிபாடுகளும் வண. போல் ஏகாம்பரம் போதகர் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த இறைபணிக்கான உதவிகளும் ஒத்துழைப்பும் அன்றைய அதிபராக இருந்த ஆசிரியமணி அவர்களால் வழங்கப்பட்டன.

காலப்போக்கில் பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட தமிழ் வழிபாடுகள் வளர்ச்சிபெற்று பெருந்தெருப் பகுதிக்கான மெதடிஸ்த ஆலயம் ஒன்றின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. 1962ஆம் ஆண்டளவில் அரசாங்கம் சகல பாடசாலைகளையும் பொறுப்பேற்றுக் கொண்ட சமயம் பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையின் நிர்வாகம், மெதடிஸ்த திருச்சபையிலிருந்து இலங்கை அரசின் கைகளுக்கு மாறியது. எனினும் மெதடிஸ்த ஆலயத்தின் தேவையை உணர்ந்த அன்றைய அதிபர் ''ஆசிரியமணி'' ம.க.சிதம்பரப்பிள்ளை அவர்கள் பாடசாலை வளவில் இருந்த வீட்டினை வழிபாட்டுத் தலமாக மாற்றியமைத்து பெருந்தெரு பிரதேசத்தில் மெதடிஸ்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் ஒன்றுக்கு வழிசமைத்தார். வண. எஸ். ஜே. ஜூலியன் போதகர் அவர்களின் காலத்தில் அத்திவாரமிடப்பட்டு 1972ஆம் ஆண்டளவில் இவ்வாலயம் பூர்த்தியாக்கப்பட்டது. தற்போது இந்த ஆலயம் தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலய எல்லைக்கு வெளியே இல. 80, இராஜவரோதயம் வீதி பகுதியில் குருமனையோடு கூடியதாக அமைந்துள்ளது. இந்த ஆலயத்தைச் சார்ந்ததாகப் பெருந்தெருவுக்கென தனியான மெதடிஸ்த சபையும் உருவாகியுள்ளது.

படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த பாடசாலை காலப்போக்கில் வேறு பல வளங்களையும் பெற்றுத் தன்னை உயர்த்திக் கொண்டுள்ளது. 24.07.1969இல் இப்பாடசாலைக்கு என நூல் நிலையமொன்று திருக்கோணமலை ''அரிமாக்'' கழகத்தினரால் கட்டப்பட்டு பாடசாலைக்கென வழங்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. நூல் நிலையம் இன்று மாணவர்களுக்குரிய பாடநூல்கள், பொது அறிவு நூல்கள், உயர்கல்வி கற்போருக்குரிய நூல்கள் என்பவற்றைக் கொண்டதாக அமைந்து சிறந்ததொரு சேவையினை வழங்கிக் கொண்டிருக்கிறது.

கிறிஸ்தவப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலை தொடர்ந்து வந்த காலங்களில் பெருமளவில் இந்து சமய மாணவர்களைக் கொண்டதாக மாற்றம் பெற்றது.

மாணவர்களில் பெரும்பான்மையானோர் இந்து சமயத்தைச் சார்ந்தவர்களாகக் காணப்பட்டதன் விளைவாக பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலை அரசின் அங்கீகாரத்துடன் ''தி/பெருந்தெரு விக்னேஸ்வர வித்தியாலயம் எனும் பெயருடன் ஓர் இந்துப் பாடசாலையாக மாற்றப்பட்டது. அனைத்து சமயத்தைச் சேர்ந்த மாணவர்களும் எவ்வித வேறுபாடுமின்றி சிறந்த கல்வியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பாடசாலையின் பணிகள் தொடர்ந்தன. பாடசாலையின் மாணவர் தொகை, அதன் சீரான வகையில் வளர்ச்சி என்பவற்றைக் கருத்தில் கொண்டு 08.05.1979 தொடக்கம் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டு ''தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம்'' எனும் தற்போதைய பெயரினைப் பெற்றது.

பாடசாலையின் புதிய இலச்சினையாக கோபுரத்தை உள்ளமைவாகக் கொண்ட யானையின் தலையையும் ஏடுகளையும் தும்பிக்கையில் தீச்சுடரையும் கொண்ட சின்னம் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சின்னத்தில் யானையின் தலையினுள் அமைந்துள்ள கோயிற் கோபுரம் திருக்கோணேஸ்வரத்தை குறிக்கின்றது. யானைத் தலை விநாயகரைப் பெயரில் கொண்ட விக்நேஸ்வர மகா வித்தியாலயத்தைக் குறித்து நிற்கின்றது. இரண்டும் இணைந்து திருக்கோணமலை விக்நேஸ்வர மகா வித்தியாலயமாக அமைகிறது. யானையின் தும்பிக்கையின் வளைவினுள் உள்ள ஏடுகள் கல்வியையும், தும்பிக்கையின் நுனியிலுள்ள தீபம் கற்பதன் மூலமாக ஏற்படும் ஞானத்தையும் குறித்து நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் மகுடவாசகமாக ''அன்பும் அறனும் பண்பும் பெறுக'' எனும் வாக்கியம் அமைந்துள்ளது. பாடசாலையில் கற்ற கல்வி மூலம் பெற்ற அறிவைக் கொண்டு அன்பும் அறனும் பண்பும் பெறுக என்னும் கருத்து இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரம் வரையில் வகுப்புக்களைக் கொண்ட சிறந்ததொரு சேவையினை ஆற்றி வந்த பாடசாலை 21.07.1981 தொடக்கம் உயர்தர வகுப்புக்களை நடாத்தக் கூடிய அனுமதிகளைப் பெற்று 1சீ தரப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. மாணவர்கள் தொகை அதிகரிப்பிற்கேற்ப வகுப்பறை வசதிகளை வழங்கும் வகையில் புதிய மூன்று மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 1999 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டு அழகுடன் கம்பீரமாகப் பாடசாலை காட்சி தருகின்றது. மாணவர்களுடன் உடனடித் தொடர்பாடல் வசதிக்காக 01.09.1997 அன்று வகுப்பறைகள் தோறும் ஒலி பெருக்கிப் பெட்டிகள் பொருத்தப்பட்டன.

பௌதீக வளங்களில் மட்டுமன்றிக் கல்விச் செயற்பாடுகளில் தி/பெருந்தெரு விக்நேஸ்வரா மகா வித்தியாலயம் இன்று ஒரு சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. 1996ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் மாணவன் பாலசிங்கம் செந்தூரன் எட்டுப் பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இப்பெருமை 1998இல் மாணவன் சு. யோகேஸ்வரராஜாவினால் தொடரப்பட்டுள்ளது. தொடர்ந்து 2001ல் மு. முகுந்தன் 9A Cயும், 2002இல் அ.மு.ஷாபி 9A S பெற்று பெருமை சேர்த்துள்ளனர். இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பல சிறப்பிடங்களைப் பெற்றுள்ளது. தமிழ், ஆங்கில மொழித் தின விழாக்கள் விளையாட்டுச் செயற்பாடுகள் ஏனைய கலை கலாச்சார நிகழ்வுகள் போன்றவற்றில் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்திப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

மாணவர்களிடம் சேவைமனப்பாங்கினை வளர்க்குமுகமாக 'சாரணர் இயக்கமும்' 'இன்ரறக்ட்' கழகமும் மாணவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றன. ''18ஆவது திருக்கோணமலை அணி'' என்று அழைக்கப்படும் பாடசாலையின் சாரணர் இயக்கம் 1996ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1998இல் ''குருளைச் சாரணர்'' இயக்கமும் ஆரம்பிக்கப்பட்டு இரண்டும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன. 1987ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இன்ரறக்ட் கழகம் பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் பல செயற்றிட்டங்களைத் திறம்பட மேற்கொண்டு வருகின்றது.

பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பல சேவையினை ஆற்றி வருகின்றது. இடைக்காலத்தில் இயங்காதிருந்த க.பொ.த. உயர்தர வகுப்புகள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவியினாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் 1992இல் புத்துயிர் பெற்றன. அத்தோடு 1996ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர வர்த்தகப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் பாடசாலைக்கான தனியான நவீன விஞ்ஞான ஆய்வுகூடமும் செயற்பாட்டறையும் இணைந்த மாடிக் கட்டிடம் உலக வங்கியின் நிதி உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டு 2000ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. அடுத்து பாடசாலைக்கு என தனியாக நூலக வசதியை ஏற்படுத்தித்தரும் பொருட்டு உலக வங்கியின் நிதி உதவியுடன் ஆரம்பப் பிரிவிலுள்ள இரண்டு வகுப்பறைகள் சகல வசதிகளுடன் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டு 2001ம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டது. வித்தியாலயத்தின் நீண்டகால தேவையாக காணப்பட்ட விசாலமான பிரார்த்தனை மண்டபம் 1ம் கட்டம் பூர்த்தியாக்கப்பட்டு 2008ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. பின்னர் 3 தட்டுக்களைக் கொண்ட மாடிக் கட்டிட வசதியை வித்தியாலயம் பெற்றுக்கொண்டது. இவற்றுக்கான நிதியுதவி அனைத்தினையும் NECORD திட்டம் வழங்கி உதவியுள்ளது.

2000ம் ஆண்டிலிருந்து இயங்கிவரும் கணினிப்பிரிவு ஆரம்பத்தில் இரண்டு கணினிகளையே பயன்படுத்த முடிந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் 23 கணனிகளை கொண்ட கணனி கற்றல் நிலையம் 27.04.2009இல் திறந்து வைக்கப்பட்டது. இதன் மூலம் கணினிக் கற்கை வசதி விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாற்று வலுவுள்ள மாணவர்களின் பிரிவு வித்தியாலயத்தில் 2007.05.07ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் மாற்று வலு கொண்ட (ஆண்) பிள்ளைகள் தமது திறன்களை வெளிப்படுத்தக்க கூடியதாக உள்ளது.

அடுத்து 2006 - 2008 காலப்பகுதியை வித்தியாலயத்தில் பொற்காலம் எனலாம். இக்காலப்பகுதியில் வித்தியாலயத்தின் கற்றல், கற்பித்தல், பௌதீக வளவிருத்தி, முகாமை நடவடிக்கைகள் புது மெருகூட்டப்பட்டு திகழ ஜப்பானின் JICA செயற்றிட்டம் உதவியது. அத்துடன் வித்தியாலயம் முதன்மை இடத்தையும் பிடித்துக்கொண்டது.

இப்பாடசாலையின் நீண்ட கால வரலாற்றில் இதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்த அதிபர்கள் நினைவு கூரப்பட வேண்டியவர்களாவர். ''ஆசிரியமணி'' திரு. க. சிதம்பரபிள்ளை அவர்களின் காலத்தின் பின்னர்

திரு. எஸ். கோ. செல்வநயினார்
திரு. எஸ். கனகசபை
திரு. எஸ். மார்க்கண்டு
திரு. சி. நடராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. க. ஜீவரெட்ணம்
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
திரு. எஸ். திருச்செல்வம்
திரு. என். சந்திரகாந்தன்
திரு. கு. கோணாமலை
திரு. எஸ். இராஜநாதன்
திரு. எஸ். மதியழகன் ஆகியவர்கள் தூண்களாகப் பாடசாலையைத் தாங்கி உள்ளனர். 2012ம் ஆண்டு இப்பாடசாலை 6S, 3R செயற்றிட்டத்தில் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றது. மேலும் க.பொ.த உயர்தர பெறுபேறுகள் க.பொ.த. சாதாரணதர பெறுபேறுகள் வளர்ச்சியடைந்த போக்கு காணப்படுகின்றது. நீரிழிவு சம்பந்தமான சீனி மீளி தேசிய செயற்றிட்டம் 2013ஆம் ஆண்டு தேசிய விருதை தட்டிக்கொண்டது. 2013இல் மாகாணமட்டத்தில் 5 இடங்களைப் பெற்றுக் கொண்டது.

அதிபர்
தி/பெருந்தெரு விக்நேஸ்வரா
மகா வித்தியாலயம்

**ஏழைக்கு இரங்கி உதவி செய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார். அவர் கொடுத்ததை ஆண்டவரே திருப்பித் தந்துவிடுவார்.**

**(நீதிமொழிகள் 19:17)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயம் பாடசாலை வரலாறு

இலங்கைத் தீவின் பசுமையும் வளமும் கொண்ட கிழக்கு மாகாணத்தின் தலைநகர் திருக்கோணமலை. நகர எல்லைக்குள் வடக்காக 2km தூரத்தில் மிக நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. அந்த வகையில் இப்பாடசாலை ஆரம்பத்தில் உப்புவெளி மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலை என்னும் பெயரில் முதல் அதிபராக திரு.எஸ்.கே.செல்வநயினாரைக் கொண்டு 28 மாணவர்களுடனும் ஒரு ஆசிரியருடனும் ஓலையால் வேயப்பட்ட சுண்ணாம்பு சுவர்களை கொண்ட ஒரு கட்டிடத்துடன் மெதடிஸ்த மிஷனால் ஆரம்பப் பாடசாலையாக 1928ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

பாடசாலை வரலாற்றில் 1973ஆம் ஆண்டு முதல் முஸ்லிம் அதிபராக ஏ.ஆர்.எம்.இல்யாஸ் அவர்கள் கடமை ஏற்றிருந்தமை பாடசாலை எழுச்சியின் மைல்கல்லாக பார்க்கப்படுகிறது. இப்பாடசால 1985.03.22ம் திகதிமுதல் முஸ்லிம் பாடசாலையாக மாற்றம் பெற்றது. ஆரம்ப காலத்தில் பிரித்தானிய இராணுவத்தினர் இங்கு குடிகொண்டிருந்தமையால் பிரித்தானியாவின் ஆட்சிக்காலத்தின் அடையாளச் சின்னமாக சில கட்டிட அமைப்புக்கள் காட்சி தருவதை இங்கு இன்றும் காணலாம்.

இந்தப்பாடசாலையின் வளாகத்தைச் சுற்றி 1992ஆம் ஆண்டு சுற்றுமதில் மிக நேர்த்தியாகவும் பாதுகாப்புக்கேற்ற விதத்திலும் கட்டப்பட்டது. சுற்றுமதிலினுள் மைதானமும் அடங்குகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தப் பாடசாலைக்குரிய காணியானது 1964 இலிருந்து முழுமையாகக் கிடைத்தமை ஒரு சிறப்பம்சமாகும். 1993இல் அதிபருக்கான இல்லம் அமைக்கப்பட்டது.

ஜமாலியா மக்களின் முன்பள்ளி கல்வி மேம்பாடு கருதி 2005ஆம் ஆண்டு People in Need மற்றும் சர்வோதய நிலையத்தின் ஊடாக முன்பள்ளிக் கட்டடம் பாடசாலை வளாகத்தினுள்ளே அமைக்கப்பட்டுள்ளமையானது இப்பாடசாலைக்கு மாணவர்களை ஆரம்பப்பிரிவினுள் உள்வாங்குவதற்கு பெரிதும் துணைபுரிகின்றது எனலாம்.

பாடசாலையின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்தினுள்ளும் ஒவ்வொரு படிநிலை முன்னேறி இருக்கின்றமையை அவ்வப்போது உணரக்கூடியதாக உள்ளது. அந்தவகையில் ஜமாலியா மகாவித்தியாலயமாக 2000ஆம் ஆண்டில் தரமுயர்த்தப்பட்டமையானது ஒரு வளர்ச்சிப் போக்கிற்கான அடித்தளமாகும் என்பதை மறுக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலத்தில் நூலகம் இயங்கி வந்தது ஒரு குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும். அந்த வகையில் நூலகத்திற்கான கட்டட வசதியோ அதற்கான தளபாட வசதியோ இல்லாத நிலையில் வகுப்பறைக் கட்டடத்தின் ஒரு பகுதியையும் மாணவர்களுக்குரிய தளபாடங்களில் சிலவற்றையும் பயன்படுத்தி நூலகம் இயங்கி வந்திருக்கின்றது. பிற்பட்ட காலப்பகுதியான 1999இல் நூலகம் புனரமைக்கப்பட்டு ஜமாலியா நகரில் ஒரு முழுமையான நூலகமாக போதுமான வசதிகளுடன் மாணவர்களுக்கு பயனளிக்கின்றமை ஒரு மகிழ்ச்சியான விடயமாகும்.

மாணவர்களின் இணைப்பாட விதான செயற்பாடுகளின் தேவை கருதி விவசாயம், மனையியல் ஆக்கத்திறன் வெளிப்பாட்டிற்கான சித்திர செயற்பாட்டிற்குமான செயற்பாட்டறைக் கட்டிடம் 1995 - 1996 காலப்பகுதியில் கட்டப்பட்டமையானது ஒரு விசேட அம்சமாகும்.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பழைய கட்டிடங்களிலேயே நடைபெற்றன. காலப்போக்கில் நெக்கோட் நிறுவனம் 2007ம் ஆண்டில் இரண்டு மாடிக்கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுத்து இந்தப் பாடசாலையின் கல்வி மேம்பாட்டிற்கான ஒரு சூழலை உருவாக்கிக் கொடுத்தமையானது மிக வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும்.

ஆசிரியர், மாணவர்களின் காலை உணவு தொடர்பான கரிசனை நிமித்தம் இந்தக் கல்லூரி வளாகத்தினுள்ளேயே சிற்றுண்டிச் சாலை ஒன்றும் அமைக்கப்பட்டமையானது மாணவர்களை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளப் பெரிதும் உதவுகின்றது. இந்த சிற்றுண்டிச் சாலை 2000 - 2001 ஆண்டுப்பகுதியில் அமைக்கப்பட்டதாகும்.

மாணவர்களின் கற்றல் கற்பித்தல் புதிய நுட்பத்திறன்களை வளர்க்கும் முகமாக இன்றைய உலகமயமாக்கலின் வேகத்திற்கேற்ப தகவல் தொழினுட்பத் தேவையினைக் கருதி மாணவர்களுக்கு வழங்கும் முகமாக (CLC) அதாவது கணினி கற்கை நிலையம் இந்தப்பாடசாலை வளாகத்தினுள்ளேயே 2004ம் ஆண்டு அமைக்கப்பட்டது ஒரு போற்றுதற்குரிய விடயமாகும். இதனூடாக மாணவர்கள் பெரிதும் பயனடைகின்றனர்.

தொடர்ந்து 2012இல் 5S செயற்திட்டம், 6S. 3R செயற்திட்டம் ஊடாக இப்பாடசாலை பல்வேறு மட்டங்களில் அபிவிருத்தி அடைந்து வருவதுடன் மாணவர்கள் சார்ந்ததும் சமூகத்தற்குத் தேவையானதுமான வழிப்புணர்வு செயற்பாடுகளை பாடசாலை நிர்வாகம் மேற்கொண்டு வருவதோடு எதிர்காலத்தில் பாடசாலையும் சமூகமும் மேம்பாடடையும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்களையும் இப்பாடசாலை நிர்வாகம் திட்டமிட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1928ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இப்பாடசாலையில் பின்வரும் அதிபர் பெருந்தகைகள் சேவையாற்றி வந்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| 01. | திரு. எஸ்.கே.செல்வநயினர் | 1928.06.03 - - |
| 02. | திரு. செல்லையா | - - 1958.07.31 |
| 03. | திரு. எஸ்.கே.செல்வநயினர் | 1958.08.01 - 1964.05.03 |
| 04. | திரு. எம்.கே.மகா சிதம்பரபிள்ளை | 1964.05.04 - 1968.09.14 |
| 05. | திரு. டீ.வீ. மார்க்கண்டு | 1968.09.15 - 1968.09.30 |
| 06. | திரு. என். கணபதிபிள்ளை | 1968.10.01 - 1970.06.15 |
| 07. | திரு. ஏ.நடராஜா | 1970.06.16 - 1970.08.31 |
| 08. | திரு. எஸ்.எஸ்.அந்தோனிப்பிள்ளை | 1970.09.01 - 1973.02.18 |
| 09. | திரு. டீ.வீ.மார்க்கண்டு | 1973.02.19 - 1973.05.02 |
| 10. | ஜனாப். ஏ.ஆர்.எம்.இல்யாஸ் | 1973.05.03 - 1981.01.11 |
| 11. | ஜனாப். என்.எம்.கே.ஆப்தீன் | 1981.01.12 - 1987.04.03 |
| 12. | ஜனாப். யூ.எல்.எம்.காலித் | 1987.04.04 - 1987.07.02 |
| 13. | ஜனாப். என்.ஏ.ஏ.காதர் | 1987.07.03 - 1990.05.31 |
| 14. | ஜனாப். எஸ்.எம்.ஏ.அஸீஸ் | 1990.06.01 - 1990.06.11 |
| 15. | ஜனாப். யூ.எல்.எம்.காலித் | 1990.06.12 - 1991.01.06 |
| 16. | ஜனாப். ஜே.எம்.யூசுப் | 1991.01.07 - 1994.06.28 |
| 17. | ஜனாப். எம்.பீ.எம்.முஸ்தபா | 1994.06.29 - 1995.06.14 |
| 18. | ஜனாப். ஜே.எம்.யூசுப் | 1995.06.15 - 1998.10.15 |
| 19. | ஜனாப். எம்.பீ.எம்.முஸ்தபா | 1998.10.16 - 2011.03.05 |
| 20. | ஜனாப். என்.எஸ்.ஏ.காதர் | 2011.03.06 - 2012.01.21 |
| 21. | ஜனாப். எம்.எம்.எம்.முஹைஸ் | 2012.01.22 - இன்றுவரை |

மேற்படி அதிபர்கள் காலத்தில் பாடசாலை பல்வேறு வளர்ச்சிபடிகளைக் கண்டு வந்துள்ளது என்பத குறிப்பிடத்தக்கது.

எம்.எம்.எம்.முஹைஸ்
அதிபர்
தி/ஜமாலியா முஸ்லிம் மகா
வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயம்

திருகோணமலை நகரை அண்மித்த பாரம்பரியக் கிராமமாக விளங்கும் சாம்பல்தீவில் மிகநீண்ட வரலாற்றைக் கொண்ட கல்வி நிறுவனமாக தி/சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயம் விளங்குகிறது. மெதடிஸ்த திருச்சபையினால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இக்கிராமத்தின் கல்வி வளர்ச்சியில் ஆற்றியுள்ள பணி அளப்பரியது. 150வது ஆண்டை நோக்கி நடைபோடுகின்ற இப்பாடசாலை சாம்பல்தீவுக் கிராமத்திலிருந்து உருவான பல கல்விமான்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு அடிப்படைக் கல்வியை வழங்கியதன் மூலம் சிறப்புப் பெறுகிறது.

சாம்பல்தீவுக் கிராமத்தில் 1874 இல் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டதாக மெதடிஸ்த திருச்சபையின் வரலாற்றுக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் பாடசாலையில் பேணப்படும் வரலாற்றின்படி ஆரம்பித்த வருடம் 1880 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 01.05.1962 இல் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்படும் வரை தொடர்ந்தும் மெதடிஸ்த திருச்சபையே பாடசாலையை நடத்திவந்துள்ளது. அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னரும் 1977 வரை சாம்பல்தீவு மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயருடனேயே இயங்கி வந்துள்ளது.

1977 இல் இடைநிலை வகுப்புகளைக் கொண்ட மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டதுடன் தி/சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. 01.03.1977 இல் இடம்பெற்ற தரமுயர்வு பாடசாலையின் வளர்ச்சியில் முக்கியமான ஒரு கட்டமாகும்.

அன்று முதல் இன்று வரை இப்பாடசாலை பல்வேறு துறைகளிலும் படிப்படியாக வளர்ச்சி கண்டு வருகின்றது. பௌதிக வளங்களிலும் பண்புத் தரம் கொண்ட கல்வியிலும் வளர்ச்சி கண்டு தற்போது 1சீ தரப் பாடசாலையாக க.பொ.த (உ/த) கலை, வர்த்தகப் பிரிவுகளுடன் இயங்கி வருகின்றது. தற்போது உள்ள மாணவர் எண்ணிக்கை 501 ஆகும். அதிபர் அடங்கலாக 29 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

சிறந்த கல்வியை வழங்கிச் சமூகத்திற்கேற்ற நற்பிரசைகளை உருவாக்கி வரும் இப்பாடசாலை தொடர்ந்தும் வளர்ச்சிப் படியில் முன்னேறிச் செல்லும் போது அதன் ஆரம்ப காலத்தில் அரும்பணியாற்றிய மெதடிஸ்த திருச்சபையை நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி

திருகோணமலை நகரிலிருந்து சுமார் 14 கி.மீ. தொலைவில் இயற்கை எழில் நிறைந்த நிலாவெளிக் கிராமத்தின் பிரதான வீதியில் தி/நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி அமைந்துள்ளது. தெற்கே பெரிய குளம் தொடக்கம் வடக்கே திரியாய் வரையான பிரதேசத்தில் வாழும் பிள்ளைகளுக்குத் தமிழ் மொழி மூலம் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியை வழங்கும் நிறுவனமாக இது சிறப்புப் பெறுகின்றது.

மெதடிஸ்த திருச்சபையினால் 1879இல் ஆரம்பிக்கப்பட்டதாகக் கருதப்படும் இப்பாடசாலை ஒன்றே கால் நூற்றாண்டைக் கடந்து பெருவிருட்சமாக வளர்ந்துள்ளது. நிலாவெளி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயருடன் மிக நீண்ட காலம் இயங்கி வந்த இப்பாடசாலைக்கு இக் கிராமத்திலிருந்து கற்றோர் பலரை உருவாக்கித் தந்தபெருமை உண்டு.

நிலாவெளியில் மெதடிஸ்த திருச்சபை 1915 இல் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. மெதடிஸ்த தேவாலயம் 1917இல் கட்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. அதேகாலப் பகுதியில் தேவாலய வளவிலேயே பாடசாலையும் இயங்கி வந்துள்ளது. 30'x30' அளவுள்ளதும் களிமண் சுவர், ஓலைக் கூரை கொண்டமைந்ததுமான சிறிய கட்டிடத்தில் சுமார் ஐம்பது மாணவர் கல்வி பயின்றுள்ளனர். பின்னர் தேவாலயத்தின் பின்புறம் நிரந்தரக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. பாடசாலையின் ஒரு பகுதி 1969 இல் 5¾ ஏக்கர் பரப்புள்ள அரச காணியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு மாற்றப்பட்டது. 1972இல் புதிய இடத்தில் முழுமையாக இயங்கத் தொடங்கியது. பழைய கட்டிடங்கள் மீண்டும் மெதடிஸ்த திருச்சபையால் பொறுப்பேற்கப்பட்டுத் தற்போது 'அருளகம்' எனும் நிறுவனத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

படிப்படியாக வளர்ச்சி கண்டு வந்த இப்பாடசாலை 1942இல் 8ம் தரம் வரை கொண்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. 1944 இல் முதல் தடவையாக நான்கு மாணவர்கள் ஐந்தாந்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமை அக்காலத்தில் வரலாற்றுச் சாதனையாகக் கருதப்பட்டது.

1977.03.01 இல் தரமுயர்த்தப்பட்ட பின் தி/நிலாவெளி தமிழ் மகாவித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. 1979 முதல் க.பொ.த (உ/த) வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. 1981 இல் முதற் தொகுதி மாணவர்கள் க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றினார்கள்.

பல வகைகளிலும் துரிதவளர்ச்சி கண்டுவந்த இப்பாடசாலை இன்று அரசாங்கத்தின் ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் உள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கப்பட்டு விரைவாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. தற்போது 638 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஆசிரியர் எண்ணிக்கை 37.

23.01.2014 இலிருந்து தி/நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி எனப் பெயர் மாற்றப்பட்டது. 01.05.2013 இலிருந்து '1ஏபி' தரப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. க.பொ.த (உ.த) இல் கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நிலாவெளிக் கிராமத்தில் கல்வி ஒளி சுடர் விட்டுப் பிரகாசிக்கக் காரணமாயிருந்த இப்பாடசாலையை நிறுவிய மெதடிஸ்த திருச்சபையும் அதனோடு இணைந்து பணியாற்றிய இக்கிராமத்தின் கல்வி முன்னோடிகளும் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூரப்படவேண்டியவர்கள்.

பாடசாலைச் சமூகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/குச்சவெளி அந்நூரியா முஸ்லிம் மகா வித்தியாலயம்

மெதடிஸ்த மிஷனால் கல்விப் பணி ஆரம்பிக்கப்பட்ட பாரம்பரிய கிராமங்களுள் குச்சவெளியும் ஒன்றாகும். இங்கு பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு துல்லியமாகத் தெரியவில்லையாயினும் நிலாவெளி, திரியாய், கும்புறுப்பிட்டி ஆகிய கிராமங்களில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியைப் பார்க்கும்போது, குச்சவெளிப் பாடசாலையும் 19ம் நூற்றாண்டின், அதாவது 1800 களின் இறுதிப் பகுதியில் நிறுவப்பட்டிருக்கலாம் எனக் கருதலாம்.

கடந்த சில ஆண்டுகளாக தி/குச்சவெளி அந்நூரியா முஸ்லிம் மகாவித்தியாலயம் என்ற பெயருடன் ஆரம்பப் பிரிவு ஒரு இடத்திலும் இடைநிலைப் பிரிவு வேறிடத்திலுமாக இயங்கி வந்த இப்பாடசாலை தற்போது 1000 பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டதையடுத்து ஆரம்பப்பிரிவு தனியானதொரு பாடசாலையாக்கப்பட்டுள்ளது. ஆரம்பப் பிரிவு இயங்குகின்ற இடமே மெதடிஸ்த மிஷன் பாடசாலை நிறுவப்பட்ட இடமாகும். அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னரும் தி/குச்சவெளி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயருடனேயே இயங்கி வந்துள்ளது. இப்பாடசாலை 2004ம் ஆண்டு சுனாமித் தாக்கத்திற்குள்ளான போது பெருமளவான பழைய ஆவணங்கள் அழிவடைந்ததினால் பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஆண்டு பற்றிய திருத்தமான தகவல்களும் கிடைக்கக் கூடியதாக இல்லை.

சுனாமி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பிரதான வீதியில் புதிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து 18.11.2007 இல் பாடசாலை புதிய இடத்திற்கு மாற்றப்பட்டது. எனினும் ஆரம்பப் பிரிவு இன்னமும் முன்பிருந்த இடத்திலேயே புதிய பாடசாலையாக இயங்குகிறது.

துரித அபிவிருத்தி கண்டு வரும் இப்பாடசாலையின் முக்கியமான வளர்ச்சிக் கட்டம் 1 சீ தரப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டமையாகும். 2011 இல் இடம் பெற்ற தரமுயர்வைத் தொடர்ந்து க.பொ.த (உ.த) கலைப்பிரிவில் மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர் தற்போதுள்ள மாணவர் எண்ணிக்கை 870. ஆசிரியர் எண்ணிக்கை 31.

கிடைக்கக் கூடியதாகவுள்ள தகவல்களின் அடிப்படையில் கடந்த காலங்களில் இப்பாடசாலையில் பணியாற்றிய அதிபர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

- திரு. கே. பொன்னுத்துரை
- திரு. எஸ்.நடராசா
- திரு. ரீ. கந்தையா
- ஜனாப் ஏ. மொகமட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஜனாப் எம். ரீ. சுபடீன்
- ஜனாப் எம். சி. எம். ஹசன்
- ஜனாப் ரீ. அக்பர்
- ஜனாப் எம். எம். மொஹிதீன்
- ஜனாபா. அகமட் லெப்பை
- ஜனாப். ஆர் எம்.தாஹா
- ஜனாப் எம். சின்னலெப்பை
- ஜனாப் ஜே. குலாம் மொஹிதீன்
- ஜனாப் எஸ். ஏ. அனீஸ்
- ஜனாப். ஏ.ஏ. அகமட் லெப்பை
- ஜனாப். என். எம். செயட் அகமட்
- ஜனாப். ஜெகுப் ஆர்தீன்
- ஜனாப். எம் எஸ் ஏ. காதர்
- ஜனாப். ஏ. ஆரிப்
- ஜனாப். எம் ஏ. சலாகுதீன்
- ஜனாப். ஜே. எம். ஏ. ஜெளபர்
- ஜனாபா. ஏ. எப்.அப்துல் சலாம்
- ஜனாப். எம். ஐ. சஜீபு

இப்பாடசாலை 2014ம் ஆண்டிலிருந்து 1000 பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுத் தொடர்ந்தும் வளர்ச்சி கண்டுவருகின்றது என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

பாடசாலைச் சமூகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/திரியாய் தமிழ் மகாவித்தியாலயம்

திருகோணமலை மாவட்டத்தின் வடக்குப் பகுதியிலமைந்துள்ள முது தமிழ் கிராமமே திரியாய் ஆகும். நீர் வளமும் நிலவளமும் நிறைந்ததாய் உள்ள இக்கிராமம் நெற் செய்கைக்கும், கால்நடை வளர்ப்பிற்கும் பேர் பெற்றது. பாலும் தேனும் குறைவுபடாத, செழிப்புமிக்க இக்கிராமம் நீண்ட கல்வி வரலாற்றையும் கொண்டுள்ளது.

திருகோணமலை நகருக்கு வெளியே மெதடிஸ்த மிஷனால் பாடசாலையொன்று நிறுவப்பட்ட மிகத் தொலைவிலுள்ள கிராமமாக இதைக் கருதலாம். மெதடிஸ்த திருச்சபையின் வரலாற்றுப் பதிவுகளில் 1884 இல் திரியாய் பாடசாலைக்கு ரூபா 170/- செலவில் கட்டிடம் அமைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பாடசாலை அதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருக்கக் கூடும் எனக் கருதவும் இடமுண்டு.

ஆரம்பத்தில் மெதடிஸ்த மிஷன் பாடசாலை அமைந்திருந்த இடம் தற்போதுள்ள பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னாலுள்ள பகுதியாகும். பின்னர் அரசாங்கம் பொறுப்பேற்ற பின் தி/திரியாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயருடன் தற்போதுள்ள இடத்தில் நிரந்தரமாக இயங்கத் தொடங்கியது. மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து தி/திரியாய் தமிழ் மகாவித்தியாலயம் எனப் பெயர் பெற்றது. 01.03.1977 இலிருந்து 1 சீ தரப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது.

கடந்த மூன்று தசாப்த யுத்த காலத்தில் திரியாய் கிராமம் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டது. பாடசாலையும் இடப்பெயர்வுகளையும் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பங்களையும் சந்தித்து வந்துள்ளது. 1985இல் ஒரு தடவை மூடப்பட்டு, 1987இல் மீளத் திறக்கப்பட்டது. மீண்டும் 1990இல் மூடப்பட்டு 31.04.2003இல் மீள ஆரம்பிக்கப்பட்டது.

இன்றைய சூழலில் குறைவான வளங்களுடன் சிறப்பான சேவையை வழங்கி வருகின்றது. தற்போது மொத்தம் 350 மாணவர்களையும் 14 ஆசிரியர்களையும் கொண்டு இயங்கி வருகின்ற இப் பாடசாலையில் சமீபகால மீள் குடியேற்றத்தின் பின் கட்டிடங்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டன. புதிய தோற்றத்துடனும், புதிய பொலிவுடனும் மீண்டும் புதிய கல்வி வரலாறு படைக்கத் தொடங்கியிருக்கும் இப்பாடசாலையின் வரலாறு தெரிந்த இக்கிராமத்தின் மூத்ததலை முறையினர் மெதடிஸ்த மிஷனின் பங்களிப்பை என்றென்றும் நன்றியுடன் நினைவு கூருகின்றனர்.

பாடசாலைச் சமூகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மெதடிஸ்த திரு அவை
# திருக்கோணமலை சேகரம்
# இன்றைய கல்விப் பணி

1960களில் பாடசாலைகள் அரசினால் பொறுப்பேற்கப்பட்ட பின்னரும் ஆன்மீகப் பணியில் திருச்சபையை இறைவன் வல்லமையாகப் பயன்படுத்தினார். கடந்த முப்பது வருடகால யுத்த சூழ்நிலைகளிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேசக்கரம் நீட்டிக் கிறிஸ்துவின் அன்பைப் பகிர்ந்து கொள்வதில் திருச்சபை முன்னின்று பணியாற்றியது. இந்தக் காலப்பகுதியில் துன்பப்பட்ட பிள்ளைகளின் துயர் துடைப்பதற்காக சிறுவர் இல்லம், சிறுமியர் இல்லம், சத்துணவு மையங்கள் என்பன ஆரம்பித்து நடத்தப்பட்டன.

1992இல் ஆரம்பிக்கப்பட்டு டொக்யாட் வீதியில் இயங்கி வந்த சிறுவர் இல்லம் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த கே.என்.எச் நிறுவனத்தின் அனுசரணையுடன் 2013 வரை சிறப்பாக இயங்கியது. பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் இங்கே தங்கியிருந்து நகர்ப்பாடசாலைகளில் கற்கும் வாய்ப்புக்களைப் பெற்றனர். இங்கு தங்கியிருந்து கல்வி கற்று வாழ்வில் நல்ல நிலையடைந்திருக்கும் பல இளைஞர்கள், இவ்வில்லத்தைத்தம் சொந்த வீடாகவே கருதுகின்றனர். கடந்த 2013இல் இப்பணி முடிவுக்கு வந்துவிட்டது போதும். இந்நிறுவனம் கல்விப் பணியில் பங்களிப்புச் செய்தமை வரலாற்றில் மறக்கப்பட முடியாதது.

நிலாவெளியில் 1989முதல் 2013 வரை சிறுமியர் இல்லம் இயங்கியது. பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்பிள்ளைகள் பலர் அங்கு தங்கியிருந்து கல்வி கற்றனர். குடும்பச் சூழ்நிலை மற்றும் பொருளாதார பிரச்சினை காரணமாகக் கல்வியைத் தொடரமுடியாத நிலையில் இருந்து பெண்பிள்ளைகள் பலர் உயர்தரம் வரை கல்வியைத் தொடர்வதற்கு இவ்வில்லம் பேருதவி புரிந்தது. 'அருளகம்' என்ற பெயருடன் இயங்கி வந்த இவ்வில்லத்தில் தங்கியிருந்து கல்வி பயின்ற பிள்ளைகள் பலர் இன்று வாழ்வில் நன்நிலையடைந்து வாழ்வது இறையருளாலேயே ஆகும்.

இவற்றோடு கூட சத்துணவு மையங்களும், முன்பள்ளிகளும் நிறுவப்பட்டு அவைமூலம் சிறந்த பணி ஆற்றப்பட்டது. இன்று மெதடிஸ்த திரு அவையினால் சிறந்த முன்பள்ளிக் கல்வி கீழ்வரும் இடங்களில் இயங்கி வரும் முன்பள்ளிகளால் வழங்கப்பட்டு வருகின்றது. இவை சிறப்பான முறையில் முன்பிள்ளைப்பருவக் கல்வி அபிவிருத்திக்கு வழிகாட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. டொக்யாட் வீதி
2. அலஸ்தோட்டம்
3. ஆத்திமோட்டை
4. அன்புவழிபுரம்
5. கன்னியா
6. சாந்திபுரம்

இவற்றுள் அலஸ்தோட்டத்திலுள்ள முன்பள்ளி, மாதிரி முன்பள்ளியாகக் கல்வித் திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மெதடிஸ்த திருஅவை ஏதோ ஒரு வகையில் தொடர்ந்தும் கல்விப் பணி ஆற்றுவது இறைவனின் சித்தமாக உள்ளது என நம்புகின்றோம். வருங்காலத்தில் இறையருளால் பணிகள் மென்மேலும் விரிவடையும் எனவும் விசுவாசிக்கின்றோம்.

சிறப்பாக இவ்வாண்டு மெதடிஸ்த திருச்சபையின் இருநூற்றாண்டு நிறைவை முன்னிட்டுத் திருச்சபையால் தொடங்கப்பட்ட எட்டுப் பாடசாலைகளிலிருந்தும் பொதுப் பரீட்சைகளில் சிறப்பாகத் தேர்ச்சியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வொன்றை நடத்துகின்றோம். வருங்காலத்திலும் இத்தகைய நிகழ்வை ஆண்டு தோறும் தொடர இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

2014.06.07 அன்று திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இருநூற்றாண்டு நிறைவு விழாவில் அதிபர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறுகின்றது.

இலங்கையில் மெதடிஸ்த திருஅவை இருநூற்றாண்டைப் பூர்த்தி செய்யும் வேளையில் அச்சபையினால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் அதிபர்களாக இருக்கும் பேற்றினைப் பெற்றதற்காகக் கௌரவம் பெறும் அதிபர்கள்

1. திருமதி. உரோகினி ஜோதிநாதன் - தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி
2. திரு. வி. இராஜேந்திரன் - தி/கும்புறுபிட்டி மெ.மி.த.க.பா
3. திருமதி. ஐ. எம். முரளிதரன் - தி/பெருந்தெரு விக்நேஸ்வரா ம.வி
4. ஜனாப். எம்.எம்.எம்.முஹைஸ் - தி/ஜமாலியா மு.ம.வி
5. திருமதி. எம். உதயகுமார் - தி/சாம்பல்தீவு த.ம.வி
6. திரு. பி. ஜயமுத்து - தி/நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி
7. ஜனாப். எம். ஐ. சஜீபு - தி/குச்சவெளி அன்நூரியா மு.ம.வி
8. திரு. கே. சௌந்தரராஜா - தி/திரியாய் த.ம.வி
9. திரு. எஸ். விக்கினேஸ்வரன் - தி/கும்புறுப்பிட்டி கனிஷ்ட வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

இலங்கை மண்ணில் இருநூற்றாண்டுகாலும் மெதடிஸ்த திருஅவையை இன்று வரை தன் பணியில் வழிநடத்தி வரும் வல்ல இறைவனுக்கு நன்றி. காலத்திற்குக் காலம் தான் தெரிந்துகொண்ட இறைபணியாளர்கள் மூலம் இம்மண்ணில்திருஅவை காலூன்றவும் நிலைபெறவும் செய்து இறையரசை நோக்கிப் பயணிக்கவும் வைத்த கடவுளுக்கு நன்றி சொல்வோம்.

நமது நாட்டிற்கு நற்செய்தியைக் கொண்டுவந்த ஆதிமிஷனரிமாரை நன்றியுடன் நினைவு கூருவோம். அதேபோல நமது மண்ணில் கல்விப் பயிர் விதைக்கத் தம்மை அர்ப்பணித்த முன்னோடிகளுக்காய் கடவுளுக்கு நன்றி சொல்வோம். எங்கெல்லாம் மெதடிஸ்த திருஅவை கல்விப் பயிர் விதைத்ததோ அங்கெல்லாம் அது இன்று பெருவிருட்சமாய் வளர இறைவன் அருள் செய்துள்ளார். அவ்வாறு வளர்ந்துநிற்கும் ஒவ்வொரு பாடசாலையையும் பாடுபட்டு வளர்த்தெடுத்த அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் சமூகத்தினர் யாவரும் என்றென்றும் நினைவு கூர்ந்து பாராட்டப்பட வேண்டியவர்கள்.

மெதடிஸ்த திருஅவையினால் ஆரம்பிக்கப்பட்டு இன்று அரசாங்கப் பாடசாலைகளாகச் சிறப்புற இயங்கிவருகின்ற எட்டுப் பாடசாலைகளின் வரலாறு இச் சிறுமலரிலே தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. இம் முயற்சியில் எம்மோடு முழு மனதோடு ஒத்துழைத்த அதிபர்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி.

திரு அவையின் சேகர முகாமைக்குரு உட்பட இறைபணியாளர்கள் ஒவ்வொருவரும் தந்த வழிகாட்டலுக்கும் ஊக்கத்திற்கும் நன்றி. வாழ்த்துச் செய்திகளை வழங்கி ஊக்குவித்த திருப் பேரவைத் தலைவர், திருமாவட்டஅவைத் தலைவர் எமது முகாமைக்குரு மற்றும் மூதூர்-வாகரை சேகர முகாமைக்குரு ஆகியோருக்கும் நன்றி.

சேகர உக்கிராணக்காரர்கள் மற்றும் சபைகளின் உக்கிராணக்காரர்கள், வழிகாட்டிகள் உட்பட இம்முயற்சியில் பங்குகொண்டு ஒத்துழைத்த பொது நிலையினர் ஒவ்வொருவருக்கும் நன்றி.

இம்முயற்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, எங்கள் கோரிக்கைக்கு மதிப்பளித்து நன்கொடைகள் வழங்கி உதவிய உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் எமதுசபையின் இறைமக்களுக்கு மனமார்ந்தநன்றி.

அட்டைப் படத்தை அழகுற வடிவமைத்துத் தந்த அன்புச் சகோதரருக்கும் மலரை அச்சிடும் பணியைச் சிறப்பாக நிறைவேற்றித் தந்த அச்சகத்தாருக்கும் அன்புகலந்த நன்றி.

யாவருக்கும் இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

வெளியீட்டுக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபர் பாசறைகள்,
ஞாயிறு பாடசாலை ஒன்று கூடல்கள்,
விடுமுறை வேதாகமப் பாடசாலைகள்,
திருச்சபைக் குடும்ப ஒன்று கூடல்கள்,
கருத்தரங்குகள், செயலமர்வுகள், ஞான ஒடுக்கம், தியானம்
போன்ற கிறிஸ்தவ நிகழ்வுகளை நடத்துவதற்குத் தங்குமிட,
உணவு வசதியுடன் கூடிய அமைதியான சூழலில் அமைந்த

"அருளகம்"
தியான மையம்
நிலாவெளி மெதடிஸ்த தேவாலய வளாகத்தில்

தொடர்புகளுக்கு :- 077 7448362, 075 5579191

ARULAHAM
RETREAT CENTRE
AT THE PREMISES OF THE METHODIST CHURCH, NILAVELI
WITH ACCOMMODATION & MEALS
Available for
Youth Camps,
Sunday School Rallies,
Vacation Bible Schools,
Family Camps,
Seminars, Workshops Etc…
Situated in a calm & quiet environment.
For more details,
Contact: - 077-7448362, 075-5579191


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Print By: SS Digital's 0777 695 635